Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஹெனி
பல், மூக்குக் கண்ணாடியகம்
❋ கண் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக் கொள்ள
❋ உறுதியான பற்களைக் கட்டிக்கொள்ள
❋ மிதப்பு பற்களுக்கு கிளிப் செய்துகொள்ள
நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்
கண்டி வீதி, சாவகச்சேரி. பிரதான வீதி, பருத்தித்துறை
540, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 வைகாசி 19 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.ஆசீர் 12 (01-06-2004) செவ்வாய்க்கிழமை இதழ் :243

# ஊடகவியலாளர் நடேசன் மட்டு. நகரில் படுகொலை!

## நேற்றுக்காலை பரபரப்புச் சம்பவம்

(மட்டக்களப்பு)

**பிரபல ஊடகவியலாளரான ஐயாத்துரை நடேசன், மட்டக்களப்பில் நேற்று காலை இனந் தெரியாத துப்பாக்கி நபரால் சுட்டுக் கொல்லப் பட்டார்.**

**வீட்டிலிருந்து தாம் கடமையாற்றும் வருமான வரித் திணைக்கள அலுவலகத்துக்குச் சென்று கொண்டிருந்தபோதே நேற்றுக்காலை 8.45 மணியளவில் இவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரியவருகின்றது.**

**இலங்கையிலும், சர்வதேச ஊடகங்கள் மத்தியிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -**



சுமார் இருபது வருட காலமாக ஊடகத்துறையில் பணியாற்றி வந்த ஐ.நடேசன் நேற்றுக்காலை வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் வருமானவரித் திணைக்கள அலுவலகம் நோக்கிச் சென்று கொண்டிருந்தார்.

அலுவலகத்திலிருந்து சுமார் 200 மீற்றர் தொலைவில் வைத்து ஆயுதபாணி இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். 9 மி.மீ பிஸ்டல் துப்பாக்கியால் நெஞ்சில் சுடப்பட்ட இவர் சம்பவ இடத்திலேயே மரணமானார்.

சம்பவத்தையடுத்து அப்பகுதிக்குச் சென்ற பொலிஸார் - பத்திரிகையாளர் நடேசன் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் வீதியோரத்தில் கிடக்கக் கண்டதுடன், கால்வாய் ஒன்றில் அவரது சடலத்தையும் கண்டு பிடித்தனர்.

இந்தச் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் எவரும் இது வரை பொலிஸாரிடம் தகவல் தெரிவிக்கவில்லை.

இந்தப் படுகொலை சம்பவம் குறித்து பொலிஸார் தகவல் கொடுத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வனை சந்தித்து மனோகணேசன் பேச்சு!

(கிளிநொச்சி)

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை மேல் மாகாண மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தினார்.

இந்தச் சந்திப்பு கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நேற்றுக்காலை 11 மணியளவில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பை முடித்தபின் மனோகணேசன் கருத்துத் தெரிவிக்கையில்,

எதிர்வரும் மேல்மாகாண சபைத் தேர்தலில் தமது கட்சி தனித்தே போட்டியிடும் எனவும், மலையக தமிழ் மக்களுக்கு சிறந்த தலைமை இல்லாமையினால்தான் இந்த முடிவை எடுத்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## சமாதான முயற்சிக்கு ஆதரவு கோரி ஜனாதிபதி, பிரதமர் இந்தியா செல்வர்

(கொழும்பு)

சமாதான முயற்சிகளுக்கு இந்திய அரசின் ஆதரவைப் பெறுவதற்காக ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இருவரும் விரைவில் இந்தியாவுக்கு செல்லவுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துவரும் ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய இருவரும் இந்திய அரச தலைவர்களை சந்தித்து பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

இந்தச் சந்திப்புக்களின் போது விடுதலைப் புலிகளுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு முன்னெடுக்கவுள்ள சமாதானப் பேச்சு,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடனான பேச்சுக்களுக்கு இந்தியா உதவி வழங்கத் தயார்!

கதிர்காமரிடம் உறுதியளிப்பு



## புளத் சிங்கள இனக்கலவரத்தில் இருபது தமிழ் மக்கள் காயம்!

பதற்றம் நீடிப்பு - பொலிஸார் குவிப்பு



இந்தியா சென்றுள்ள அமைச்சர் கதிர்காமர் நேற்று பிரதமர் மன்மோகன் சிங்குடன் உரையாடுவதைக் காணலாம்.

(புதுடெல்கி)

விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிப்பதற்கு தம்மாலான உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாக இந்தியா உறுதியளித்துள்ளது.

இந்தியாவுக்கு நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டிருக்கும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் நட்வர்சிங் இந்த உறுதிமொழியை வழங்கினார்.

லக்ஷ்மன் கதிர்காமரை சந்தித்து பேச்சுநடத்திய பின்னர் புதுடெல்கியில் செய்தியாளர்களிடம் பேசிய நட்வர்சிங் -

இலங்கைத் தீவில் பேச்சுவார்த்தை மூலமாக அமைதித் தீர்வு காணப்படும் என்று இந்தியா நம்புகிறது.

சமாதானத்தை ஏற்படுத்த எந்த வழிகளில் எல்லாம் உதவ முடியுமோ அவ்வாறு உதவி வழங்கத் தயார்.

சமாதான முயற்சிகளில் இறுதித் தீர்வு எட்டப்படும் வரை இந்தியாவின் பங்களிப்புத் தேவை என வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் கோரிக்கை விடுத்திருந்தார்.

இது குறித்து இந்தியா சாதகமாகப் பரிசீலிக்கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கையும் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார். புதிய அரசு பதவியேற்ற பின்னர் இடம்பெற்ற முதல் உயர் மட்டச் சந்திப்பு இதுவாகும்.

# இருபது தமிழ் மக்கள் காயம்!

## பதற்றம் நீடிப்பு - பொலிஸார் குவிப்பு

(கொழும்பு)

களுத்துறை பகுதியில் தமிழ்-சிங்கள மக்களிடையே ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் 20 பேருக்கு மேல் காயமடைந்துள்ளனர். இவர்களில் 5 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும், 10 க்கும் மேற்பட்ட வீடுகள் அடித்து நொருக்கப்பட்டு தீ வைக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

நேற்று மாலை 4 மணியளவில் புளத்சிங்களப் பகுதியிலுள்ள மிலகந்த தோட்டத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

தமிழர் ஒருவர் வீட்டில் நடைபெற்ற திருமண நிகழ்வில், அங்கு சென்றிருந்த சிங்கள மக்களுக்கும், தமிழ்மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாகவே இந்த மோதல் சம்பவம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில், சிங்கள மக்களால் தாக்கப்பட்ட 20 க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். காயமடைந்த இவர்களை புத்தளம் சிங்கள வைத்தியசாலையில் அனு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டுப்பற்றாளர் நடேசன் படுகொலைக்கு விடுதலைப் புலிகள் வன்மையாக கண்டனம்

(கிளிநொச்சி)

மூத்த ஊடகவியலாளரும் தமிழ் தேசியப்பற்றாளருமான ஜி.நடேசன் நேற்று கண்மூடித்தனமாகப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

இது தொடர்பாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது -

தமிழ்த்தேசியத்தின் எழுச்சிக்கும், அதன் உட்கட்டுமான வளர்ச்சிக்கும் உரிய உழைப்புக்களை மேற்கொண்டு அயராது பாடுபட்டவர். தனது எழுத்துத் துறையால் தமிழ்த்தேசியத்தின் கூர்மைப்படுத்தலுக்கு ஓயாது அறைகூவல் விடுத்தவர்.

அற்புதமான கருத்துக்களை முன்வைத்தவர், தமிழ்த்தேசியத்திற்கு மாறான நடவடிக்கைகளையும், கருத்துக்களையும் வன்மையாக மறுதலித்தவர்.

தமிழினத்தின் விடுதலைக்கான விடுதலைப் போராட்டத்தின் நியாயங்களை எழுத்துத்துறையால் வலியுறுத்தியவர். இனத்தின் விடுதலைக்கான நியாயங்களை வலுப்படுத்தும் ஆணித்தரமான கருத்துக்களையும், தமிழினத்தின் போராட்டத்திற்கு வலுவூட்டும் புள்ளி விபரங்களையும், தரவுகளையும் அவ்வப்காலங்களில் தனது ஆக்கங்கள் மூலம் வெளிப்படுத்தியவர்.

நிகழ்காலத்தோடு

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ ஏயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...
(சி/2489)

# வலிகாமம் கல்வி வலயத்தில்

## யுனிசெப் நிறுவனத்தின் உதவித்திட்டத்தின் கீழ் 15 பாடசாலைகளுக்கு குடிநீர், சுகாதார வசதிகள்

(ஆழியவளை)

வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள 15 பாடசாலைகளில் குடிநீர் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு யுனிசெப் நிறுவனம் முன்வந்துள்ளது.

இந்தப்பாடசாலைகளில் குடிநீர் தண்ணீர்த்தொட்டிகள், அவற்றிற்கான நீர் இறைக்கும் இயந்திரங்கள், மலசல கூடங்கள் என்பன அமைப்பதற்கு 26 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவை வலயக்கல்வி அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளது.

கல்வித்திணைக்களத்தின் ஊடாக பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களினால் இந்த வேலைத்திட்டங் கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தக் கல்வி வலயத்தில் உள்ள சண்டிலிப்பாய் வடக்கு அ.த.க. பாடசாலை, ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை, நவாலி சென். பீற்ஸ வித்தியாலயம், மானிப்பாய் சென். ஆனஸ் றோ.க.த.க பாடசாலை, வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி, மூளாய அ.மி.த.க. பாடசாலை, சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாலயம், உடுவில் மல்வம் றோ.க.த.க பாடசாலை, ஏழாலை றோ.க.த.க. பாடசாலை, சங்குவேலி அ.த.க பாடசாலை, அளவெட்டி தெற்கு றோ.க.த.க பாடசாலை, நவாலி சைவ வித்தியாலயம், வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலயம், ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம், மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கே மேற்படி வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

### அம்மன் களஞ்சியம் நூல் வெளியீடு

தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோவில் மகா கும்பாபிஷேக மலரான 'அம்மன் களஞ்சியம் நூல்' வெளியீட்டு விழா நாளை காலை 10 மணிக்கு ஆலய பரிபாலனசபைத் தலைவர் சி.லிங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

### சமகால அரசியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினால் நடத்தப்படும் சமகால அரசியல் கருத்தரங்கின் 8 ஆவது தொடர் எதிர்வரும் வியாழக்கிழமை பி.ப.3.30 மணிக்கு அச்சுவேலி மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் 'வடக்கு கிழக்கு பொருளாதார அபிவிருத்தி பற்றிய பார்வை' என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக பொருளியற்துறைத் தலைவர் பேராசிரியர் வி.பி.சிவநாதன் கருத்துரை வழங்கவுள்ளார்.

எனவே இந்தக் கலந்துரையாடலில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தமிழீழ மாணவர் பேரவையினர் கேட்டுள்ளனர்.

### டிப்ளோமா ஆசிரியர்களுக்கான விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண தமிழ் தேசிய கல்வியியற் கல்லூரி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் விசேட கூட்டம் ஒன்று நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.புதிய உயர் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

ஆசிரியர் நியமனம் தொடர்பான விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாட இருப்பதால், அனைத்து உறுப்பினர்களையும் தவறாது இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார்.

### 3 ஆம் வருட மாணவர்களுக்கு அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறை சித்திரமும் வடிவமைப்பும் 3ஆம் வருட மாணவர்களுக்கான அவசர கலந்துரையாடலொன்று இன்று 9.30 மணியளவில் நடைபெறவுள்ளதால் அனைத்து மாணவர்களையும் யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைக்கு சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.


ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
சூர்யா, சித்தார்த், மாதவன், மீரா ஜாஸ்மின், திரிஷா நடித்த

ஆய்த எழுத்து
(சி-2387)
காட்சிநேரம்:-10.30,2.30,6.30,9.30 (பு.நே)

திறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், லைலா, வடிவேல் நடித்த
கம்பீரம்
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
AMERICAN PIE
வெள்ளி,சனி,ஞாயிறு இரவு8.45 (பு.நே)
(சி-2386)

நாகம்ஸ் சுன்னாகம்
மாதவன், சதா, விவேக நடித்த

எதிரி
அடுத்த வெளியீடு 04.06.2004 முதல்
(சி-2397)
(நீல்ஸ்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

324, Palaly Road, Jaffna.
யாழ்நகரில் முதன் முறையாக
Microsoft
Certify System Engineers

Microsoft நிறுவனத்தினால் வழங்கப்படும் சர்வதேச தர சான்றிதழுக்கான கற்கை நெறிகள்

- கற்கை நெறிகள் MCS நிறுவனத்தில் நடைபெறும்.
- பரீட்சைகள் Microsoft நிறுவனத்தினால் இணையத்தினூடாக நடாத்தப்பட்டு சான்றிதழ்கள் Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇனால் கையொப்பமிட்டு வழங்கப்படும்.
- கணனி பற்றிய அடிப்படை அறிவு நுழைவுத்தகமைக்கு போதுமானதாகும்.
- முதல் *Module* பூர்த்தி செய்ததும் *Micrsoft Certified Prefessional (MCP)* மேலும் 3 *Module* பூர்த்தி செய்ததும் *Microsoft Certified System Administrator (MCSA)* மேலும் 4 *Module* பூர்த்தி செய்ததும் *Microsoft Certified System Engineers (MCSE)* சான்றிதழ்கள்.


நீங்களும் குறுகிய காலத்தில் சர்வதேச தர கணனி விற்பன்னராகலாம்
மேற்படி கற்கைநெறி தொடர்பான விசேட கருத்தரங்கு
02-06-2004 புதன் மாலை 4 மணிக்கு
மேலதிக விபரங்களிற்கு, நேரில்
MCS,
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு
தமிழீழ மாணவர் அமைப்பு
நடாத்தும்
மாபெரும்-கணனிக்-கருத்தரங்கு
காலம் : 02-06- 2004 புதன் கிழமை
நேரம் : காலை 10.00 மணி முதல் பிற்பகல் 02.30 வரை
இடம் : யா/வேலணை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்..

- கணனி அறிமுகம்
- கணனி வரலாறு
- கணனி கட்டமைப்பு
- கணனி பியோகங்கள்
- இணைய அறிமுகம்
- இணையத்தின் வரலாறு
- இணைய இணைப்பு
- இணையத்தின் பயன்பாடுகள்

மற்றும் நவீன உலகில் தகவல் தொழில் நுட்பக் கல்வியின் தேவையும் முக்கியத்துவமும் உட்படப் பல பிரதான விடயங்கள் ஆராயப்படவுள்ளது. தகவல் தொழில்நுட்ப முன்னணி வள ஆளணியினர் கலந்து கொள்ளவுள்ளனர்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
தமிழீழ மாணவர் அமைப்பு
யாழ் மாவட்டம்.
தமிழீழம்.

இன்னும் 4 நாட்களே உள்ளன !
Mega
கொம்ப்யூட்டர் உயர் கல்விக்கான இலவச புலமைப்பரிசில் பரீட்சை
5-6-2004
ASIAN COMPUTERS
- 2 G, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
- Prasanna Computers - K.K.S.வீதி,கண்ணாகம்.
- கொடிகாமம் ரோட், நெல்லியடி.

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த கம்ப்யூட்டர் :.போக்கஸ்
தமிழர் தாயகத்திலிருந்து தமிழ் பேசும் மக்களுக்கான தகவல் தொழில்நுட்ப ஊடகம்
ஏப்ரல் மாத இதழ் பரபரப்பான விற்பனையில் குடாநாட்டு அனைத்துப் புத்தகசாலைகளிலும்

யாழ்.நகரில்: பூபாலசிங்கம் புத்தகசாலை, மக்மிலன் புத்தகசாலை, ரூபன் புத்தகசாலை
சுன்னாகத்தில்: துர்க்கா ஸ்ரேசனறிஸ்
மல்லாகத்தில்: IIT நிறுவனம்
நெல்லியடியில்: மொடேர்ன் ஸ்ரோர்ஸ்
உடுப்பிட்டியில்: பிரியங்கா ஸ்ரோர்ஸ்
சாவகச்சேரியில்: சிறி கோணேஸ்வரா புத்தகசாலை, பொதிகை கொம்பியூட்டர் கிரபிக்ஸ்
கொடிகாமத்தில்: நியு அருள்நாயகி புத்தகசாலை
மந்திகையில்: நாவலர் புத்தகசாலை
பருத்தித்துறையில்: கமலா புத்தகசாலை, பிரியங்கா புத்தகசாலை, செல்லாச்சி புத்தகசாலை

இன்னும் பல புதிய அம்சங்களுடனும், தகவல்களுடனும் மே மாத இதழ் வெகு விரைவில் எதிர்பார்த்திருங்கள்
கம்ப்யூட்டர் :.போக்கஸ்
120, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
021-2227285, மின்னஞ்சல்: editor@computer focus.com

# சவூதி பணய நாடகத்தில் 2 இலங்கையர்களும் பலி!

சவூதி அரேபியாவின் கிழக்குப் பகுதியில் எண்ணெய்த் தொழிற்சாலை வளாகத்தில் பணயக் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த வெளிநாட்டவர்களை மீட்கும் நடவடிக்கையின் போது - இரண்டு இலங்கையர்களும் கொல்லப்பட்டதாக சவூதி அதிகாரிகள் தெரிவித்தனர்.

எண்ணெய் தொழிற்சாலையில் பணியாற்றும் வெளிநாட்டவர்களை - அல்-கோபார் நகரில் தீவிரவாதிகள் பணயக்கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தனர். கடந்த சனிக்கிழமை பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட வெளிநாட்டவர்களில் ஏழுபேர் இலங்கையர்களாவர்.

இவர்களில் இருவரே மீட்பு நடவடிக்கையின்போது நேற்று முன்தினம் கொல்லப்பட்டதாகவும், ஏனைய ஐவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டு விட்டதாகவும், அதிகாரிகள் தெரிவித்தனர்.

சவூதி அரேபிய கொமாண்டோக்கள் பணயக் கைதிகளை மீட்க நடத்திய திடீர் அதிரடித் தாக்குதல் நடவடிக்கையில்-

நுவரெலியாவைச் சேர்ந்த 30 வயதான சிவசுப்பிரமணியம், மோதறையைச் சேர்ந்த 25 வயதானபிரதீப் அந்தோனி ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இவர்கள் பணயக் கைதிகளாகத் தடுத்துவைக்கப்பட்டிருந்த வளாகத்தில் பணிபுரிந்து வந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மீட்பு நடவடிக்கை மீட்பு பணய நாடகத்தில் 22 பேர் கோல்லப்பட்டதுடன் குறைந்தது எட்டுப்பேர் காயமடைந்தனர்.

மீட்கப்பட்ட இலங்கையரில் மருதானையைச் சேர்ந்த மொகமட் அனீஸ், காலியைச் சேர்ந்த மொகமட் பரீட், நீர்கொழும்பைச்சேர்ந்த மொகமட் சஹீட், அளுத்கமுவைச் சேர்ந்த மொகமட் முகாஜ்ரீன், கொழும்பைச் சேர்ந்தமொகமட் இம்தியாஸ் ஆகியோர் அடங்குகின்றனர்.



ஜனாதிபதி மாளிகையில் சுழற்பந்துவீச்சாளர் முரளிதரனுக்கு அளிக்கப்பட்ட விருந்துபசார நிகழ்வின் போது - சபாநாயகருடன் முப்படைத் தளபதிகள் உரையாடிக்கொண்டிருக்கிறார்கள்.

# சுதந்திர முன்னணி – ஜே.வி.பி முறுகல் நிலை மேலும் தீவிரம்!

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டமைப்பினர் இடையேயான முறுகல் நிலை மேலும் வலுப்பெற்றுள்ளது.

பாதுகாப்பு பிரதியமைச்சர், மற்றும் புத்த சாசன அமைச்சராக முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்கவும், அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சராக, டி.ஈ.டபிள்யூ குணசேகரவும், ஜனாதிபதியால் புதிதாக நியமிக்கப்பட்டமை தொடர்பாகவே இந்த முறுகல் நிலை வலுப்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

மேற்படி ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ள இரண்டு நியமனங்களும், 35 அமைச்சர்கள் மட்டுமே அமைச்சரவையில் அங்கம் வகிக்கலாம் என்ற கூட்டமைப்பின் விதியினை ஜனாதிபதி மீறி அமைச்சர்களின் எண்ணிக்கையை 37 ஆக அதிகரித்துள்ளதாகவும் ஜே.வி.பியால் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை நாடாளுமன்றத்துக்கு 20 அமைச்சர்களே போதுமானதென ஜே.வி.பி முன்னர் கூறி வந்தமை குறிப்பிடத்தக்கது.

# விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் மனித உரிமை நிறுவனம் அமைக்கப்படவுள்ளது!

தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல் சம்பவங்களைக் கண்காணிக்கும் வகையில், மனித உரிமை நிறுவனம் ஒன்றைத் தமிழீழ விடுதலைப் புலிகள் நிறுவவுள்ளதாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சாளர் தயா மாஸ்டர் தெரிவித்தார்.

அண்மையில் சமாதான செயற்பாடுகளின் சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் தலைவரும், மனித உரிமைகள் தொடர்பான விவகாரங்களில் நிபுணத்துவம் பெற்றவருமான இயன் மார்ட்டினுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் மனித உரிமை நிறுவனம் ஒன்று ஆரம்பிக்கப்படுமென, அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உறுதியளித்திருந்ததமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்த முயற்சியை மனித உரிமை மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் செயலாளர் என்.கந்தசாமி பெரிதும் வரவேற்றுள்ளதோடு, தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்த மனித உரிமை நிறுவனத்துக்கு சுயாதீனமான உத்தியோகஸ்தர்களே பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டுமெனவும், இதன் மூலமே, புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வெளியேயும் இந்நிறுவனத்தின் பணிகளை விரிவுபடுத்த முடியுமெனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## மேல்மாகாண சபைத் தேர்தலில்

# புதிய முஸ்லிம் கட்சியொன்றும் வேட்புமனு தாக்கல் செய்துள்ளது

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு எதிராக புதிய முஸ்லிம் கட்சி ஒன்று, அரசாங்கத்தின் ஆதரவுடன், மேல் மாகாண சபைத் தேர்தலுக்கான தனது வேட்பு மனுவை தாக்கல் செய்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் ஆதரவுடன், மாகாண சபைத் தேர்தலில் குதித்துள்ள இப்புதிய முஸ்லிம் கட்சியின் வேட்பாளர்கள் ஒவ்வொருவருக்கும், தேர்தல் பிரசாரப் பணமாக தலா ஒரு மில்லியன் ரூபாவை அரசாங்கம் வழங்கியுள்ளதாகவும் தெரியவருகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் முக்கியஸ்தர்களுள் ஒருவரான ஸ்ரீபதி சூரியாராச்சி என்பரே இக்கட்சியின் தோற்றத்துக்கான அரசின் பிரதான தூதுவராக விளங்குவதாக அறியப்படுகிறது.

நசீர் அஹமட் என்பவரின் தலைமையிலான இக்கட்சியில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் முன்னாள் அங்கத்தவர் எம்.ஜே.எம்.முஸாம்பில் என்பவரும் இடம் பெற்றுள்ளார்.

ரவூப் ஹக்கீமை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் பதவியிலிருந்தும், முஸ்லிம்களின் தேசியத் தலைவர் பதவியிலிருந்தும், நீக்குவதை வலியுறுத்தி, சகல பள்ளிவாசல்களின் ஊடாகவும், ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்கு இப்புதிய முஸ்லிம் கட்சி தீர்மானித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, ரவூப் ஹக்கீம் மீதான பாலியல் குற்றச்சாட்டினையும், துறைமுக அமைச்சராக அவர் இருந்தவேளை இடம்பெற்ற ஊழல்களையும் அம்பலப்படுத்தும் வகையில், சுயாதீன விசாரணைக் குழுவொன்றும் அமைக்கப்படவுள்ளதாகவும் அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது.

# போதைப்பொருள் விற்ற வயோதிபப் பெண் கைது!

மன்னார் பள்ளிமுனைக் கடற்கரைப் பகுதியில் வைத்து கஞ்சா மற்றும் ஹெரோயின் விற்ற வயோதிபப் பெண்ணும், அவற்றை வாங்கிய இரண்டு இளைஞர்களும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் 9 மணியளவில் பள்ளிமுனைக் கடற்கரையில் வைத்து இந்தப் போதைப் பொருட்களை குறித்த வயோதிப மாது விற்பனை செய்தவேளை - அதனை இரண்டு இளைஞர்கள் வாங்கியுள்ளனர். அப்பகுதியில் இவ்வாறான சம்பவம் நடைபெறுவதாக பொலிஸாருக்கு ஏற்கனவே தகவல் கிடைத்து அங்கு சென்றிருந்த பொலிஸார் இந்த மூவரையும் கைது செய்தனர். இவர்களிடமிருந்து 50 கிராம் கஞ்சாவையும், 12 மில்லிகிராம் ஹெரோயினையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மூவரையும் பொலிஸார் நேற்று மன்னார் மாவட்ட நீதிபதி எம்.எம்.அப்துல்லா முன்னிலையில் அவரது இல்லத்தில் ஆஜர்படுத்தியவேளை இவர்கள் மூவரையும் பொலிஸாரின் காவலில் வைத்திருந்த பின்னர் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

அண்மைக்காலமாக இந்தியாவிலிருந்து அகதிகளாகவும், தனிப்பட்ட ரீதியிலும் படகுகள் மூலம் மன்னார் வருவோரிடம் பெருமளவு போதைப் பொருட்களைப் பொலிஸார் கைப்பற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (201)

# நீதி, மின்வலு மறுசீரமைப்பு குறித்து அடுத்த மாதமளவில் அறிவிக்கப்படும்

நிதி மற்றும் மின்வலு உற்பத்தித் துறைகளை மறுசீரமைக்கும் திட்டங்கள் தொடர்பான விபரங்கள் எதிர்வரும் மாதத்தில் அறிவிக்கப்பட உள்ளன.

இது தொடர்பான விரிவான பொருளாதாரக்கொள்கைளை ஜூன்மாத நடுப்பகுதியில்வெளியிடப்போவதாக ஜனாதிபதி உறுதியளித்திருப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

அண்மையில் இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்ட சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் ஜனாதிபதி உட்பட உயரதிகாரிகளைச் சந்தித்து உரையாடினர். சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 56 கோடி அமெரிக்க டொலர்களை அபிவிருத்தி உதவியாக வழங்குவதற்கு உறுதியளித்துள்ளது.

# கூட்டணிக் கட்சிக்குள் குழப்பங்கள்; பேச்சுக்கள் மூலமே தீர்க்கவேண்டும்

## அமைச்சர் டி.எம்.ஜெயரத்ன தெரிவிப்பு

பல கட்சிகள் ஒன்றிணைந்து உருவான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் முறுகல் நிலை ஏற்படும் இடத்து அதற்கு பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்வுகாணப்பட வேண்டுமென தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் டி.எம்.ஜெயரத்ன தெரிவித்தார்.

இலக்கு ஒன்றை நோக்கிச் செல்லும் பயணத்தில் தேவைக்கேற்ப சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் முன்னணியுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு முரணான வகையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக ஜே.வி.பியினர் சாட்டியுள்ள குற்றச்சாட்டுத் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ள ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, கூட்டமைப்பின் நோக்கங்களுக்குப் பாதகம் ஏற்படுமிடத்து மக்கள் சார்பாக செயற்படுவதற்கு தாங்கள் பின்நிற்கப் போவதில்லையென குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பாக தொடர்ந்து கருத்து தெரிவித்த அமைச்சர் டி.எம்.ஜெயரத்ன, கட்சிக்குள் பல பிரச்சினைகளும், வாதப் பிரதிவாதங்களும் ஏற்படலாம். அவற்றை வெளிப்படுத்தாது. அந்தப் பிரச்சினைகள் குறித்து தனிப்பட்ட ரீதியில் சம்பந்தப்பட்ட தலைவர்களோடு அல்லது கட்சியின் முக்கியஸ்தர்களோடு பேசித் தீர்க்க வேண்டுமே தவிர, அதனை மக்கள் மத்தியில் பிரசாரம் செய்வது பொருத்தமானது அல்ல. ஆனால் அவ்வாறான செயலை செய்வதற்கு எதிர்க்கட்சிகள் தயாராக இருக்கின்றன.

எதிர்க்கட்சிகள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசாங்கத்தை பலவீனப்படுத்த முடியும். எனவே பல கட்சிகள் இணைந்து உருவாக்கியுள்ள் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணிக்குள் பல நெருக்கடிகள் தோன்றலாம் என்று, சுட்டிக் காட்டிய அமைச்சர் ஜெயரத்ன, அவற்றை பேச்சுவார்த்தைகளின் மூலமே தீர்த்துக்கொள்ள முயற்சிக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

# பேச்சுக்களுக்கான நிகழ்ச்சி நிரலினை அறிவிக்கும் பொறுப்பு ஜனாதிபதியிடமே!

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கான நேரத்தையும், அது தொடர்பான நிகழ்ச்சி நிரலையும் அறிவிக்க வேண்டிய பொறுப்பு ஜனாதிபதியிடமே இருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதாக, கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்திவெளியிட்டது.

கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு, தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்டர் கருத்து வெளியிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு-கிழக்குக்கான இடைக்கால நிர்வாக சபை தொடர்பாகவே முதலில் பேசப்பட வேண்டுமென்ற, தமது உறுதியான நிலைப்பாட்டைத் தமிழீழ விடுதலைப் புலிகள் ஏற்கனவே அரசாங்கத்திடம் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளதாகவும், ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்த உறுதியான நிலைப்பாட்டை, ஏற்றுக்கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் தயங்கிவருகின்றமையே பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பதற்கான முக்கிய தடையாக விளங்குவதாகவும், தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிப்பது தொடர்பான ஜனாதிபதியின் பதிலுக்காக தாம் இன்னமும் காத்துக் கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார் என அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

# மேற்கிந்தியத் தீவுகள் முதல் இனிங்ஸில் ஐந்து விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 262!

(சென் லூசியா)

மேற்கிந்தியத் தீவுகள் - பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் சென் லூசியாவில் இடம்பெற்றுவரும் முதலாவது டெஸ்டின் மூன்றாம் நாள் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி தனது முதல் இனிங்ஸில் 5 விக்கெட்டுக்களை இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றது.

முன்னதாக பங்களாதேஷ் அணி தனது முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 416 ஓட்டங்களைப் பெற்றது.

இவ்வணி சார்பாக அணித்தலைவர் ஹபிபுல் பஷார் மற்றும் பின்வரிசை ஆட்டக்காரரான மொகமட் ரபீக் இருவரும் சிறப்பாக விளையாடி முறையே 113, 111 ஓட்டங்களையும், மற்றைய வீரர்களான மொகமட் அஷ்ரபுல் 81, ஜாவிட் ஓமர் 32, ராஜின் சலே 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கொலின்ஸ் 4, சர்வான் 3, லோசன் 2, கைல் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் தனது முதலாவது இனிங்ஸை விளையாடிக் கொண்டிருக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணி மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றது.

இவ்வணி சார்பாக ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கைல் ஆட்டமிழக்காமல் 110, சர்வான் 40, அணித்தலைவர்



லாரா 53, ஸ்மித் 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மொகமட் ரபீக் 2, ரபாஷ் பைசா, ர..மான் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

முதலாவது டெஸ்ட் போட்டி இரு அணிகளுக்கும் இடையில் சமநிலையிலேயே முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# நியூஸிலாந்து அணியுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டி; வோகன் அணிக்கு திரும்பினார்

(லண்டன்)

நியூஸிலாந்து அணிக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணியில் மைக்கல் வோகன் சேர்க்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான 2 ஆவது டெஸ்ட் போட்டி, வரும் வியாழக்கிழமை ஹெட்டிங்லியில் தொடங்கவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையே கடந்த வாரம் லோர்ட்ஸில் நடைபெற்று முடிந்த முதல் டெஸ்டில் காயம் காரணமாக வோகன் விளையாடவில்லை. இந்தப் போட்டியில் 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றிபெற்றது.

இந்த நிலையில் இரு அணிகளுக்கும் இடையேயான 2 ஆவது போட்டிக்கான இங்கிலாந்து அணியில் வோகன் இடம்பெற்றுள்ளார். லோர்ட்ஸில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடிய இங்கிலாந்து அணியில் ஒரே ஒரு மாற்றம் செய்யப்பட்டு 2 அவது டெஸ்ட் போட்டிக்கான அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வினை அறிவித்த முன்னாள் கப்டன் நசார் ஹுசைனுக்குப் பதிலாக ஆன்ட்ரூ ஸ்ட்ராஸ் அணியில் சேர்க்கப்பட்டார். லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற முதல் டெஸ்டில் வோகனுக்குப் பதிலாக விளையாடிய ஸ்ட்ராஸ் முதல் இன்னிங்ஸில் 112 ஓட்டங்களையும், 2 ஆவது இன்னிங்ஸில் 83 ஓட்டங்களையும் எடுத்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த முதல் டெஸ்ட் போட்டிக்



குப் பின்னர் ஹுசைன் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வினை அறிவித்தார். இங்கிலாந்து, நியூஸிலாந்து அணிகளுக்கிடையே 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் இங்கிலாந்து 1-0 என்ற நிலையில் முன்னிலையிலுள்ளது.

இந்த நிலையில் தொடக்க வீரராகக் களம் இறங்குவது யார் எனற பிரச்சினை இங்கிலாந்து அணிக்கு ஏற்பட்டுள்ளது. ட்ரெஸ்கோதிக்குடன் தொடக்க வீரராக வோகனைக் களம் இறக்குவதா அல்லது ஸ்ட்ராசைக் களம் இறக்குவதா என்ற சிக்கல் தேர்வுக்குழுவுக்கு எற்பட்டுள்ளது. இருப்பினும், இது குறித்த முடிவை வோகனிடமே தேர்வுக்குழு விட்டுவிட்டது.

**இங்கிலாந்து அணி:**

மைக்கேல் வோகன் (கப்டன்), ஜேம்ஸ் அன்டர்சன், மார்க் புட்சர், போல் கொலிங்வுட், ஆண்ட்ரூ பிளினரொப், ஆஷ்லே கைல்ஸ், ஸ்ரீபன் ஹர்மிசன், மத்யூ ஹோகார்ட், ஜெரைன்ட் ஜோன்ஸ், சைமன் ஜோன்ஸ், அன்ட்ரூ ஸ்ட்ராஸ், கிரஹாம் தோர்ப், மார்கஸ் ட்ரெஸ்கோதிக்

# அக்தரின் தற்போதைய நிலை என்ன? கிரிக்கெட் சபையிடம் கேட்கவுள்ளேன்

## இன்ஸமாம் கூறுகிறார்



உடற்தகுதி விடயத்தில் சொகைப் அக்தரின் தற்போதைய நிலை என்ன என்பதைப் பற்றி பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நிர்வாகிகளிடம் கேட்கப்போதவாக பாகிஸ்தான் அணியின் கப்டன் இன்ஸமாம் தெரிவித்தார்.

சமீபத்தில் இந்தியாவுக்கு எதிராக நடைபெற்று முடிந்த தொடரில் பாகிஸ்தான் அணிக்கு பெரும் பிரச்சினையாக இருந்தது அந்த அணியின் உடற்தகுதி விடயமே. இதனால், இந்தியாவிடம் ஒருநாள் போட்டி, டெஸ்ட் தொடர்களை அந்த அணி இழந்தது.

இந்த நிலையில் வரும் ஜுலை மாதம் இலங்கையில் ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ளது. இந்தியாவுக்கு எதிரான தொடரின் போது ஏற்பட்ட உடற்தகுதிப் பிரச்சினை எதிர்வரும் ஆசியக்கோப்பைப் போட்டியிலும் வந்துவிடக்கூடாது என்பதில் இன்ஸமாம் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்கிறார்.

இதனால் பாகிஸ்தான் அணியின் அதிவேகப்பந்து வீச்சாளரான அக்தரின் உடற்தகுதி தற்போது எந்த நிலையில் உள்ளது என்பதை தெரிந்துகொள்ள இன்ஸமாம் ஆர்வமுடன் இருக்கிறார்.

மேலும், ஆசியக்கோப்பை போட்டிகளுக்கு முன்னர் நடைபெறவுள்ள உடற்தகுதிப் பயிற்சி முகாமில் கலந்துகொள்ள பாகிஸ்தான் வீரர்கள் அனைவருக்கும் இன்ஸமாம் அழைப்பு விடுத்துள்ளார்.

இது குறித்து இன்ஸமாம் கூறியதாக 'த நியூஸ்' என்னும் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது -


வரும் 4 ஆம் திகதி பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நிர்வாகிகளைச் சந்திக்கவுள்ளேன். இந்தச் சந்திப்பின்போது அக்தரின் உடற்தகுதி என்ன என்பதைப் பற்றித் தெரிந்துகொள்வேன்.

ஏனெனில், பாகிஸ்தான் அணிக்கு அக்தர் மிகவும் முக்கியமான வீரர். சமீபகாலமாக எங்களுடைய அணியில் காயம் காரணமாக வீரர்கள் அவதிப்படுவது வாடிக்கையாகி விட்டது. இதுவே பெரும் பிரச்சினையாகவும் இருந்து வருகிறது. இதே போன்ற நிலை ஆசிய கோப்பையிலும் தொடரக்கூடாது.

மேலும், தற்போது கவுண்டி போட்டிகளில் விளையாடிவரும் பாகிஸ்தான் வீரர்களை ஆசியக் கோப்பையில் விளையாட அணிக்குத் திரும்ப அழைக்கவும் கிரிக்கெட் சபையிடம் கேட்டுக்கொள்வேன்.

ஆசியக்கோப்பையில் யார் யார் விளையாடுவார்கள் என்பதைப்பற்றி கிரிக்கெட் சபையிடமிருந்து தெரிந்துகொள்ள விருப்பமுடன் இருக்கிறேன் என்று இன்ஸமாம் கூறியதாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு எதிராக ராவல்



பிண்டியில் நடைபெற்ற மூன்றாவது டெஸ்ட் போட்டியின் போது காயம் காரணமாக அக்தர் விளையாடாததும், தற்போது கவுண்டி போட்டிகளில் விளையாடியதால் அக்தரின் காயம் அதிகமாகி இருப்பதும் இன்ஸமாமுக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியுளளது.

இனிமேல் எந்த ஒரு போட்டிக்கு முன்னரும் வீரர்களின் உடற்தகுதி விடயத்தில் அதிக கவனம் செலுத்தப்போவதாகவும், இதனை வலியுறுத்தப்போவதாகவும் இன்ஸமாம் குறிப்பிட்டார்.




# தூய ஒளி வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட போட்டிகள்

(கொக்குவில்)

தூய ஒளி வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் குருநகர் பாடுமீன் விளையாட்டு மைதானத்தில் இன்று மோதவிருக்கும் அணிகள் -

பிற்பகல் 2.30 மணிக்கு மயிலங்காடு சிறிமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவாலி சென். பீற்றர்ஸ் கழகம் மோதும்.

பிற்பகல் 3.30 மணிக்கு ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் மோதும்.

மாலை 4.30 மணிக்கு நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை யங் ஹென்றீஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

(206)

# அணியில் இடம்பெற வேண்டுமெனில் உடற் தகுதியை அக்தர் நிரூபிக்கவேண்டும்!

## பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் தெரிவிப்பு

பாகிஸ்தான் அணியில் இடம் பெறவேண்டுமெனில், சொகைப் அக்தர் உடற்தகுதியை நிரூபிக்கவேண்டும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷஹாரியார்கான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான தோல்வி குறித்து விளக்கமளிக்க பாகிஸ்தான் நாடாளுமன்ற செனட் குழு, பாகிஸ்தான் கிரிக்கெட்சபை நிர்வாகிகளிடம் விளக்கம் கேட்டிருந்தது.

இது குறித்து ஏறக்குறைய மூன்று மணிநேரம் விளக்கமளித்த பின்னர், பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷஹாரியார்கான் நிருபர்களைச் சந்தித்தார். அப்போது சொகைப் அக்தர் மீதான நடவடிக்கைகள் குறித்து அவர் விளக்கினார்.

அப்போது அவர் கூறுகையில், அக்தர் மீது மருத்துவ விசாரணை நடத்தியதற்கு அவரிடம் மன்னிப்புக் கேட்கப் போவதில்லை. எதிர்காலத்தில் அணியில் இடம்பெறவேண்டும் என்றால் - உடற்தகுதிப் பரிசோதனைக்கு அக்தர் உட்படுத்தப்பட வேண்டும் என்று ஷஹாரியார்கான் தெரிவித்தார்.

மருத்துவக் குழு விசாரணை நடத்தியதன்மூலம் அக்தரை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அவமானப் படுத்திவிட்டதாக இம்ரான் கூறியது பற்றிய கேள்விக்குப் பதிலளித்த ஷஹாரியார்கான் கூறுகையில்,

ராவல்பிண்டியில் நடைபெற்ற இந்தியாவிற்கு எதிரான 3 ஆவது டெஸ்ட் போட்டியின் 3 ஆவது நாளின் போது அக்தர் ஆட மறுத்ததைத் தொடர்ந்து அணியின் நெறிமுறையைக் காக்கவே இந்த விசாரணை நடத்தப்பட்டதாகக் கூறினார்.

எதிர்வரும் காலங்களில் அணியில் அக்தர் இடம்பெறவேண்டுமெனில், அவரது மனப்பான்மை குறித்துப் பரிசோதனை நடத்தப்படும் என்றும் ஷஹாரியார்கான் கூறினார்.

பயிற்சியாளர், கப்டன் ஆகியோருக்குப் பிரச்சினை ஏற்படுத்தியதால், இனிமேல் அக்தர் மிகவும் பொறுப்புடன் இருக்கவேண்டும் என்று விரும்புவதாக, பேட்டியின்போது உடனிருந்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைமை நிர்வாகி ரமீஸ் ராஜா தெரிவித்தார்.

இந்தப் பேட்டியின்போது இளம் வீரர்களையும் ஷஹாரியார்கான் கடுமையாகத் தாக்கினார். இளம் வீரர்களுக்குக் கிரிக்கெட் விளையாட்டின் அடிப்படையே தெரியவில்லை என்றும் ஷஹாரியார்கான் கூறினார்.

தற்காப்பு ஆட்டத்தினை உணர்ந்துகொள்ளத் தவறியதால், ராவல்பிண்டி டெஸ்ட்டில் தோல்வியடைய நேர்ந்ததாகவும், எனவே, டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் தற்காப்பு ஆட்ட நுணுக்கங்களை அவர்கள் தங்கள் கிரிக்கெட் வாழ்வில் தொடக்கத்திலேயே கற்று அறிந்ருந்திருக்க வேண்டியது மிகவும் அவசியம் என்றும் கான் தெரிவித்தார்.

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான தொடர் மிகச் சிறப்பான முறையில் நடத்தப்பட்டதாகவும், பாகிஸ்தானில் உலகக் கோப்பை நடத்தப்பட்டபோது கிடைத்த பணத்தைவிட பல மடங்கு லாபம் இந்தத் தொடரின் போது கிடைத்ததாகவும் கான் தெரிவித்தார்.

விளம்பர அனுசரணை வருமானம் 250 கோடி. தவிர இந்தத் தொடரில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு 15 கோடி ரூபாய் இலாபம் கிடைத்தது. தலைமை நிர்வாகி பதவியில் இருந்து ரமீஸ்ராஜா நீக்கப்படுவது குறித்து வெளியான தகவல்களையும் பேட்டியின்போது கான் மறுத்தார்.

## பந்து வீச்சாளர் முரளிதரன்

# அவுஸ்ரேலிய பயணத்திலிருந்து விலகும் முடிவில் மாற்றமில்லை!

அவுஸ்ரேலிய சுற்றுப்பயணத்திலிருந்து விலகிக்கொள்ளும் தனது முடிவை இலங்கை அணியின் வீரர் முரளிதரன் மாற்றிக்கொள்ளவில்லை என்று இலங்கைக் கிரிக்கெட் சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளரான முரளிதரனின் பந்து வீச்சு, முறையானதாக இல்லை என்று அவுஸ்ரேலியப் பிரதமர் ஜோன் ஹவாட் கருத்துக் கூறியிருந்தார்.

இதனால், இலங்கை அணியின் அவுஸ்ரேலியப் பயணத்திலிருந்து விலக முரளிதரன் முடிவுசெய்தார்.

இந்த முடிவை முரளிதரன் மாற்றிக்கொள்ளவில்லை என்றும், இந்த முடிவை எடுக்கும் நெருக்கடிக்கு அவர் தள்ளப்பட்டுவிட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தி உலக சாதனை படைத்த முரளிதரனின் 'தூஸ்ரா' பந்துவீச்சுக்குத் தடை விதிக்கப்பட்டது. அவுஸ்ரேலிய பயணத்திலிருந்து விலகுவது குறித்து முரளிதரன் கிரிக்கெட் சபையிடம் அதிகாரபூர்வமாகத் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சுக்கள் - திணைக்களங்களுக்கு

# தமிழ் மொழிமூலம் அனுப்பும் கடிதங்களுடன் ஆங்கில மொழிபெயர்ப்பையும் இணைக்கவும்

## பிரதேச செயலர்களிடம் அரச அதிபர் கோரிக்கை

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களிலுள்ள அமைச்சுக்கள், திணைக்களங்களுக்கு அனுப்பும் கடிதங்கள் தமிழ்மொழி மூலம் அனுப்பப்படுவதனால் வேலைகள் தாமதமடைவதாகவும், இத னால் சிங்கள அல்லது ஆங்கில மொழிபெயர்ப்பையும் அதனுடன் இணைத்து அனுப்புமாறும் சகல பிரதேச செயலாளர்களையும் யாழ். அரசாங்க அதிபர் கடிதம் மூலம் கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழ் மொழியில் தொடர்பாடல் சட்டபூர்வமாயினும் தமிழ் மொழி தெரியாத அலுவலர்களே அதிகமாகக் கொண்ட அலுவலகங்களில் தமிழ் மொழிமூலம் அனுப்பப்படும் கடிதங்கள் அவ்வலுவலர்களின் கவனத்தைப் பெறுவதில் தாமதமேற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதனால் சம்பந்தப்பட்ட பொதுமக்கள் பயனடைவது தாமதமடைவதுடன் நீண்ட காலத்திற்கு அவர்களின் விடயங்கள் கிடப்பில் போடப்படும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. எனவே, கடிதங்களை தமிழ்மொழியில் அனுப்பும் போது அக்கடிதத்தினது சிங்கள அல்லது ஆங்கில மொழிபெயர்ப்பையும் அனுப்புவது விரும்பத்தக்கது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (113)

# தட்டெழுத்து, சுருக்கெழுத்து பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

பாடசாலையை விட்டுவிலகிய இளைஞர், யுவதிகளின் நலன்கருதி வடமாகாண சுருக்கெழுத்துக் கழகம் வதிரியிலுள்ள அதன பயிற்சி நிலையத்தில் 7 மாதகால தமிழ், ஆங்கில, சுருக்கெழுத்து, தட்டச்சுப் பயிற்சிகளை நாளைமறுதினம் முதல் ஆரம்பிக்கவுள்ளது.

இவர்களுக்கான வகுப்பறைப் பயிற்சியைத் தொடர்ந்து 6 மாத காலம் அரச அலுவலகம் ஒன்றில் செயன்முறைப் பயிற்சி பெறவும் ஒழுங்குகள் செய்யப்படும். இதப் பயிற்சிக்கு விண்ணப்பக் கட்டணமாக 50 ரூபாவும், நிர்வாகச் செலவுக்காக 500 ரூபாவும் அன்பளிப்பாகச் செலுத்த வேண்டும். மாதாந்தக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

பயிற்சிபெற ஆர்வமுடைய வட மாகாணத்தைச் சேர்ந்த எவரும் விபரங்களை கழகத்துடன் நேரடியாகத் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

# நீர்க் குழாய்களின் அருகே கழிவுகள் கொட்டப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

கச்சேரி கிழக்கு பகுதியிலுள்ள நீர்க்குழாய்கள் அருகே பெருமளவு குப்பைகள் கழிவுப் பொருட்கள் மற்றும் இறந்த விலங்குகளின் எச்சங்கள் கொட்டப்படுவதனால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதாக மக்கள் தெரிவித்தனர்.

யாழ்.செயலகத்திற்கு அண்மையில் உள்ள கச்சேரி கிழக்கு வீதியில் நீர்க்குழாய்கள் அருகே நீண்ட நாட்களாக குப்பைகள், கழிவுப் பொருட்கள் கொட்டப்படுவதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதோடு நுளம்பு, ஈ போன்றவற்றின் பெருக்கங்கள் அதிகரித்துக்காணப்படும் அபாயமும் தோன்றியுள்ளது.

இதனால் சுகாதாரச் சீர்கேடுகளும் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் இது பற்றி உரிய அதிகாரிகள் கவனம் எடுக்கவில்லை என்றும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.(55)

நெடுந்தீவு - குறிகட்டுவான் இடையில்

# தனியார் படகுகள் சேவையில் ஈடுபடுவதனால் போக்குவரத்துக் கட்டணங்கள் அதிகரிப்பு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு - குறிகட்டுவான் இடையேயான பயணிகள் படகுச் சேவையில் தற்போது தனியார் படகுகள் சேவையில் ஈடுபடுவதனால் போக்குவரத்துக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தனியார் பயணிகள் படகான 'அக்குவாடிக்' படகு ஒரு வழிக் கட்டணமாக முப்பது ரூபாவும், சேவையில் ஈடுபடுத்தப்படும் தனியொருவரின் இழுவைப்படகுக்கு ஒரு வழிக்கட்டணமாக நாற்பது ரூபாவும் அறவிடப் பட்டுவருகின்றது. கட்டண விபரங்கள் தொடர்பாக உரியவர்கள் பகிரங்கமாக அறிவித்தல் எதனையும் விடாமையினால் - வெளியிடங்களிலிருந்து நெடுந்தீவுக்கு வரும் பயணிகள் நிதி நெருக்கடி நிலைமைக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - இவ்விடயம் தொடர்பாக, அண்மையில் நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பல பிரதிநிதிகளாலும் பிரஸ்தாபிக்கப்பட்டமையும் இங்கே சுட்டிக்காட்டத்தக்கதாகும். (113)

## சட்டவிரோத மின்பாவனை துன்னாலையில் அதிகரிப்பு

(துன்னாலை)

கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த துன்னாலைப் பகுதியில் களவாக மின்சாரம் பெறுவோர் தொகை அதிகரித்துள்ளதாக அறியப்படுகிறது.

முறையாக மின் இணைப்பைப் பெற்றுக் கொண்டவர்கள் மட்டுப்படுத்திய மின்சாரத்தைப் பாவிக்கும் அதே வேளை, சட்டவிரோத மின்பாவனையாளர்கள் அதிகளவில் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (13)

# குடாநாட்டில் இறால் வளர்ப்புக்கு பொருத்தமான இடங்கள் தெரிவு!

யாழ். குடாநாட்டில் இறால் வளர்ப்பிற்குப் பொருத்தமான இடங்களைக் கண்டறிவதற்கான செயலமர்வு கடந்த 27 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தின் கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் நடைபெற்றது.

இதன்படி, காக்கைதீவு மீன் சந்தைக்கு மேற்குப் புறமாக வட்டுக்கோட்டை கல்லுண்டாய் வீதியிலிருந்து அராலிச் சந்தைவரை இருபுறமும் அடங்கிய பிரதேசத்தில் 80-100 ஏக்கர் நிலப்பரப்பும், தென் புறமாகச் செல்லும் வீதியிலுள்ள பிரதேசத்தில் 30 - 40 ஏக்கர் நிலப்பரப்பும் கண்டறியப்பட்டுள்ளது.

வடமராட்சிப் பிரதேசத்தில் வல்லைவெளி, கரணவாய், மண்டான் பகுதிகளில் 30 - 40 ஏக்கர் நிலப்பரப்பு இருப்பதாக கண்டறியப்பட்டது.

தும்பளை கிழக்குப் பிரதேசத்தை பார்வையிட்ட இந்தக் குழு இந்தப் பிரதேசத்தின் மண்ணின் தன்மையையும், ஏனைய பரிசோதனைகளையும் மேற்கொண்ட பின்னரே இறால் வளர்ப்பிற்கான தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை, காரைநகர் பிரதேசத்தில் சில இடங்களுக்குச் சென்ற இந்தக் குழு அப்பிரதேசத்தைப் பார்வையிட்டு இறால் வளர்ப்பிற்குப் பொருத்தமற்ற இடமென நிராகரித்தது.

# சின்னஞ்சிறு செய்திகள்

## முழுநிலாக் கருத்தரங்கு

அகவொளி குடும்ப வளத்துணை நிலையம் நடத்தும் - 'முதுமையும், யாழ். சமூகமும்' எனும் விடயம் தொடர்பான முழுநிலாக் கருத்தரங்கு நாளை மாலை 3.30 மணிக்கு அகவொளி குடும்ப வளத்துணை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சமூகவியல்துறை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணா கருத்துரை வழங்குவார்.

## வைகாசி விசாக திருவிழா

(காரைநகர்)

காரைநகர் மணற்பிட்டி திருச்செந்தூர் புகலி சிவசுப்பிரமணியர் கோவில் வைகாசி விசாகத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் விசேட நிகழ்வாக 'நாம் எமது சைவ பாரம்பரியத்தைத் தழுவிச் செல்கின்றோமா' எனும் தலைப்பில் பட்டிமன்றம் நடைபெறவுள்ளது. (52)

## அறவழி நிலையத்தின் வெள்ளிவிழா

(யாழ்ப்பாணம்)

அறவழி நிலையத்தின் வெள்ளிவிழா நிகழ்ச்சிகள் எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கைதடி நுணாவிலில் அமைந்துள்ள நிலைய செயலக மண்டபத்தில் அறவழி நிலையத் தலைவர் டாக்டர் எஸ். எஸ்.அருளானந்தம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனும் சிறப்பு விருந்தினர்களாகத் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், கியூடெக் நிறுவன இயக்குனர் வண. பிதா. சி.ஜி.ஜெயக்குமார் அடிகளார், வட பிராந்திய மக்கள் வங்கி உதவிப் பொது முகாமையாளர் து.ரகு, இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தைச் சேர்ந்த எஸ்.பேரின்பநாயகம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## சுன்னாகம் தாவடியூடாக பஸ்சேவை

பயணிகள் வேண்டுகோளுக்கமைய இன்று முதல் சுன்னாகத்திலிருந்து உடுவில், மானிப்பாய், தாவடியூடாக யாழ்ப்பாணம் 771 பாதையிலும், சுன்னாகம் - சாவகச்சேரி 775 பாதையிலும் சிற்றூர்திகள் சேவையில் ஈடுபடுமெனத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

## விதவைகளுக்கு சுழற்சி முறையில் கடன்

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் கணவனை இழந்த குடும்பப் பெண்களுக்கு சுழற்சி முறையில் கடன் வழங்கப்படவுள்ளது. இதற்கான விபரங்கள் கிராம அலுவலர்களூடாகத் திரட்டப்படுகிறது.

இந்தக் கடன் திட்டத்தின் கீழ் வன்செயல்களினால் கணவனை இழந்த வறிய குடும்பப் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. (44)

## சமூக மேம்பாட்டு அறிவியல் கருத்தரங்கு

சித்தன்கேணி ஜனசக்தி சனசமூக நிலையமும், விநாயகர் கிராம நல்லொழுக்க சிக்கன கடன் உதவிக் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து நடாத்தும் சமூக மேம்பாட்டு அறிவியல் கருத்தரங்கு நாளை புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் த.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் சங்கானை பிரதேச செயலர் எஸ்.ஏ. மோகன்றாஜ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு 'அரச நிர்வாகிகளும் மக்களுக்கான அவர்கள் பணிகளும்' எனும் விடயம் தொடர்பாக கருத்துரை வழங்குவார்.

அத்துடன் 'இன்றைய சேமிப்பு நாளை எம்மை வாழ்விக்கும்' என்னும் பொருளில் சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் பொ.அச்சுதம்பிள்ளை கருத்துரை வழங்குவார்.

## ரயில் சேவை விஸ்தரிப்புக்கு குழு அமைப்பு

இலங்கையின் ரயில்சேவைகளைத் தரமுயர்த்துவது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

போக்குவரத்து அமைச்சினால் நியமிக்கப்பட்டிருக்கும் இந்தக் குழு அடுத்த இரண்டு வாரங்களுக்குள் தமது அறிக்கையைப் போக்குவரதது அமைச்சின் செயலாளருக்குச் சமர்ப்பிக்கும்படி கோரப்பட்டுள்ளது.

ரயில்சேவைகளை குறும் காலத்தில், இடைக் காலத்தில், நீண்ட காலத்தில் தரம் உயர்த்துவதற்கான திட்டங்களை இந்தக் குழு தயாரிக்கும் எனவும் தெரியவருகிறது.

## முன்பள்ளி விளையாட்டு விழா

கைதடி - நாவற்குழி பிரதேச முன்பள்ளிகள் அனைத்தும் இணைந்து நடத்தும் விளையாட்டுப் போட்டி நாளை காலை 8.30 மணிக்கு கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி முன்பள்ளி மேம்பாட்டுக் கட்டமைப்புத் தலைவர் எஸ்.சிவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். பாக்கியராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

## தேசிய சம்பியனாக சிவோதயன் தெரிவு

கொழும்பில் உள்ள இலங்கை சதுரங்கச் சம்மேளனத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற சதுரங்கப் போட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சி.சிவோதயன் இலங்கை தேசிய ஓபன் சம்பியன் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார்.

இந்தப் போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சிவோதயன் உட்பட 6 வீரர்கள் கலந்துகொண்டனர். அத்துடன் தென்னாசிய சதுரங்க அக்கடமியில் விரிவுரையாளராகவும் சிவோதயன் பணிபுரிகிறார். (55)

# நெடுந்தீவு கிழக்கு பஸ் சேவையை விஸ்தரிக்க விரைவில் நடவடிக்கை


நெடுந்தீவு கிழக்குப் பகுதிக்கான பஸ் போக்குவரத்து சேவையை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென வடபிராந்தியப் போக்குவரத்து சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சேவையை ஆரம்பிப்பதற்காக முன்னரே வீதியோரக் கிளைகள் அகற்றப்பட்டு வீதியும் துப்புரவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. முதற்கட்டமாக நோயாளர்கள் மற்றும் அலுவலர்கள் நன்மை கருதி தற்போது செயற்பட்டு வரும் சேவையான காலை 8.30 மணி சேவையே தற்போது வழங்கப்படுமெனவும் காலப்போக்கில் பயணிகள் படகு சேவை நேரத்திற்கு ஏற்ப பஸ் சேவையும் இடம்பெறும் எனவும் தெரிவித்தார்.

மாவிலித்துறைமுகத்திலிருந்து நெடுந்தீவு கிழக்கு ஆலமாவைப் பிள்ளையார் ஆலயம் வரையே இச்சேவை விஸ்தரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)





உலக வங்கி உதவியுடன் புனரமைக்கப்பட்ட கவடுவிராய்க் குளம் - யாழ்.மாவட்ட அரச அதிபரால் கமநல சேவைத்திணைக்கள உதவி ஆணையாளரிடம் உத்தியோகபூர்வாகக் கையளிக்கப்படுவதைக் காணலாம்.



அண்மையில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் மக்கள் நலன்புரிச் சங்கமும், படையணிகளும் இணைந்து நடத்திய 3 நாள் பயிற்சிப் பட்டறையில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி மாணவர்கள் கலந்துகொண்டு முதலாம் இடத்தைப் பெற்றனர். இதில் பங்குகொண்ட மாணவர்கள் பாடசாலை அதிபர் மற்றும் பொறுப்பாசிரயருடன் இருப்பபைப் படத்தில் காணலாம் (122)




# கடல் ஆமைகள்




உலகின் 7 வகையான ஆமைகள் கடலில் காணப்படுகின்றன. இவற்றில் மூன்று வகையான ஆமைகள் அழிவின் விழிம்புக்குச் சென்றுள்ளன. கடலோரப் பகுதியில் இவற்றை பார்வையிடுவதற்குச் செல்லும் உல்லாசப் பிரயாணிகளின் தொகையும் குறைந்து கொண்டு செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடல் ஆமைகள் இறைச்சிக்காகவும் அதன் மேற்புறத்தில் காணப்படும் ஓடுக்காகவும் கொல்லப்படுகின்றன. அத்துடன், ஆமைகளின் அடிப்பாகத்தில் காணப்படும் முட்டையும், தோலும் விற்பனைப் பொருளாகவும் பாவிக்கப்படுகின்றது. இவற்றைப் பாதுகாக்கும் உலக நிதியம் (WWF) ஆமைகளை காப்பாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. ஆமைகள் தமது முட்டைகளை கடற்கரையில் இடும் பழக்கங்கள் கொண்டவை. ஆமைகளைப் பார்வையிடுவதற்காக வரும் உல்லாசப் பிரயாணிகள் இவற்றைத் திருடுவது அதிகரித்துக் காணப்படுவதால், ஆமைகளின் இனப்பெருக்கம் குறைந்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


உலகின் 40 நாடுகளில் - 80 பகுதிகள், உல்லாசப் பிரயாணிகள் ஆமைகளைப் பார்வையிடுவதற்காக அமைக்கப்பட்டுள்ளன.

# நிக்ஸ் சிறுத்தைப் புலிகள்

**சோ**வியத் ஒன்றியத்தின் மாநிலமான ஜோர்ஜியாவில் நிக்ஸ் இனத்தைச் சேர்ந்த புலிகள் அழிந்துவிட்டதாக முன்னர் கருதப்பட்டிருந்தது. ஆனால், அங்குள்ள சரணாலயமொன்றில் புலியின் பாதச் சுவடுகளைக் காணநேர்ந்தது. இது தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டிருந்த உயிரியலாளர்கள் - அந்த இனத்தைச் சேர்ந்த புலி ஒன்று காணப்படுவதாகத் தெரிவித்துள்ளனர்.



1954 ஆம் ஆண்டு, இறுதியாகக் காணப்பட்டதாகவும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பிய நாடுகளில் இந்த வகையான புலிகள் காணப்பட்டதாகவும், மக்கள் பெருக்கத்தினால் இவை அழிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.




ஆனால், 1990 ஆம் ஆண்டுகளில், ஜோர்ஜியா மலைப்பகுதியில் வாழ்ந்த மக்கள் நிக்ஸ் இன புலி ஒன்றைக் காண நேர்ந்ததாகப் பலமுறை தெரிவித்திருந்தனர். இதனால், நோஆஷ் ஆக் (NOAH'S ARK) எனப்படும் அமைப்பு இந்தப் புலியைத் தேடும் பணியில் ஈடுபட்டது. நீண்டகாலத் தேடலின் பின், இந்த அமைப்பு தனது பணியினை நிறுத்தியிருந்தது.

ஆனால், 2003 ஆம் ஆண்டு மாரிகாலத்தில் இரு உயிரியலாளர்கள் சந்தேகத்துக்கிடமான பாதச்சுவடுகளை மீண்டும் காணநேர்ந்தது. அவற்றின் பாதச் சுவடுகளை பிளாஸ்ரர் கலவையின்மூலம் வார்ப்பு உருவாக்கி ஆசியப் புலிகள் தொடர்பான அறிவியலாளர்களுக்கு அனுப்பியிருந்தனர்.

ஆய்வின்மூலம், அந்தப் புலி மனிதர்களின் கண்ணில் தென்படாது உலாவித் திரிவதாக அறிந்துள்ளனர். இதனால், அந்தப் புலியைப் பாதுகாப்பதற்கு முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர்.

# மருந்துகளுக்கு பாதுகாப்பு முத்திரை



**எ**ங்களால் பாவிக்கப்படுகின்ற மருந்துகள் எல்லாம் உண்மையானவையா? இதைப் பற்றி நாங்கள் எப்பொழுதாவது நினைத்துப்பார்த்ததுண்டா? தேசிய மருத்துவத்துறை நிறுவனமென்று சொல்லப்படுகின்ற நிறுவனத்தினால், அங்கீகரிக்கப்பட்ட மருந்துகளையே பாவித்தல்வேண்டும். இதன் காரணமாக ஆயிரக்கணக்கான நோயாளிகள் இந்த நிறுவனத்தின்மூலம், போலி மருந்துகளை அடையாளங்கண்டு பயன்பெற்றிருக்கின்றார்கள்.

2002 ஆம் ஆண்டு தொடக்கம் கடுமையாக தன்னுடைய சட்டங்களால் இந்த நிறுவனம் மருந்து தயாரிக்கும் நிறுவனங்களுக்கு வயிற்றில் புளியைக் கரைக்க வைத்திருக்கின்றது. இந்த நிறுவனத்தின் முத்திரை குத்தப்படாத மருந்துகளால், பாவனையாளர்கள் பலவிதமான பக்கவிளைவுகளை அனுபவிக்கின்றார்கள். இந்தநிறுவனம் 1999 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. இருந்தாலும், தற்போதுதான் சர்வதேச அளவில் இந்த நிறுவனத்துக்கு நல்ல அங்கீகாரம் கிடைத்திருக்கின்றது. எல்லா நாடுகளும் இந்தநிறுவனத்தின் கண்பார்வைக்காகத் தவம் கிடக்கின்றார்கள். தற்போது சர்வதேச அளவில் எல்லா மருந்துகளும் NHS முத்திரையுடனேயே வந்துகொண்டிருக்கின்றன. எங்கள் நாட்டில் பாவிக்கப்படுகின்ற எல்லா மருந்துகளிலும் இந்த முத்திரை குத்தப்படுவதைக் காணாலாம். இந்த முத்திரை உண்மையிலேயே நோயாளிகளுக்கான பாதுகாப்பு முத்திரை.

# அதிகரிக்கும் இரட்டைக் குழந்தைகள்




வளிமண்டலத்தில் அசுத்தமாகக் காணப்படும் பிரதேசங்களில் வாழும் பெண்கள் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுக்கும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துக் காணப்படுவதாக ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

அதிக அசுத்தமான வாயுக்களை வெளியேற்றும் தொழிற்சாலைகள் அமைந்துள்ள பிரதேசங்களில் வாழும் மக்களிடையே இரட்டைக் குழந்தைக்ளைப் பெற்றெடுக்கும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளதென ஜேர்மன் விஞ்ஞானிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.


அத்துடன், தூய்மையான பிரதேசங்களில் குழந்தைகள் இல்லாதவர்களின் தொகை அதிகரித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

அசுத்தமான காற்றில் காணப்படும் நஞ்சுப் பொருட்களில் காணப்படும் இரசாயனப் பொருட்கள், பெண்களின் ஒஸ்ரொயின் (Oestrogen) எனப்படும் ஓசோன்களைக் கட்டுப்படுத்துவதாகவும், இதனால் பெண் முட்டைகள் பெருகுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரிக்க வாய்ப்புள்ளதெனவும் தெரிவித்துள்ளனர்.

# புதிய ரீவி (கேம்) விளையாட்டு



**எ**ப்படித்தான் ரீவி கேம்களைத் தயாரித்து சந்தையில் விட்டாலும், அது பாவனையாளர்களுக்கு கொஞ்சக் காலத்தில் எரிச்சலூட்டக்கூடியதாகவும், அலுப்புத்தட்டக் கூடியதாகவும் இருக்கின்றது. ஆகவே, புதியவகையான கேம்களைக் கண்டறிய



வேண்டிய நிலையில் தொழிலநுட்பவியலாளர்கள் இருக்கின்றார்கள். சர்வதேச உலகில் முன்னணி நிறுவனமாகத் திகழ்கின்ற நின்ரென்டோ நிறுவனம் அலுப்புத்தட்டாத ரீவி கேம்களை உருவாக்குவதில் தற்போது ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றது. இது ஒரு புதியவகை அம்சமாக இருக்கும் என்பதில் எந்தவிதமான ஐயமுமில்லை.

ஏனெனில், இதில் இரண்டு திரை காணப்படும். அத்துடன், கணினிமூலம் மாற்றக்கூடிய சில அமைப்புக்களும் இருப்பதனால், இதனைப் புதியசந்ததி விரும்பும்.

அந்த நிறுவனத்தினுடைய கருத்துப்படி 2004 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் இந்தவகை ரீவி கேம்கள் வெளியிடக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. இந்தவக விடியோ கேம்களைச் சந்தைப்படுத்துவதனைச் சொனி அல்லது மைக்றோசொவ்ட் நிறுவனம் பெற்றுக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போது காணப்படுகின்ற ரீவி கேம்களில் சில சிக்கலான தொழில்நுட்ப அம்சங்கள் இனிவருகின்ற புதிய விளையாட்டுக்களில் இருக்காது.

இரண்டே இரண்டு பட்டன்கள் தான் அவற்றினை வைத்துக்கொண்டு, முழு ரீவி கேம் அமைப்பையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரக்கூடிய சுலபமான ரீவி கேம் அடுத்த வருடம் வந்துவிடும்.

# கர்ப்பிணிகளைப் பாதிக்கும் ஆஸ்துமா



**ஆ**ஸ்துமா நோயினால் பாதிப்படைந்த பெண்களில் பெண்சிசுவைப் பிரசவிக்கவுள்ள பெண்கள் இந்தநோயினால் அதிகம் கஷ்டமடைவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பெண்சிசுவை பிரசவிக்கவுள்ள பெண்களில் - சிசுக்கள் உற்பத்தி செய்யும் இரசாயனப் பொருளொன்று ஆஸ்துமா நோயை அதிகரிக்கச் செய்வதாக அவுஸ்ரேலிய ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால், கர்ப்பகாலத்தில் எண்ணைச் சத்துமிக்க மீன்களை உணவில் சேர்த்துக் கொள்வதன்மூலம் ஆஸ்துமாவின் தாக்கத்தைக் குறைத்துக்கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - ஆண் குழந்தைகளை கருத்தரித்திருந்த பெண்கள் - ஆஸ்துமா நோயின் பாதிப்புக் குறைவாகவே காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனால், ஆஸ்துமாவுக்கும், ஓமோன்களுக்கும் தொடர்பிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை ஆஸ்துமா நோயினால் பாதிக்கப்பட்ட பெண் ஒருவரின் குழந்தையும் இந்தநோயினால் பாதிக்கப்படும் வாய்ப்புகள் அதிகரித்துக் காணப்படுவதாகவும் ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

## திரை விமர்சனம்

# பேரழகன்



மலையாளத்தில் வெற்றிபெற்ற 'குஞ்சு கூனன்' படம்தான் தமிழில் 'பேரழகன்'. பிறமொழிப் படங்கள் பொதுவாக வெற்றி பெறுவதில்லை என்ற வாக்கை உடைத்து வெற்றி பெற்றிருக்கின்றது இந்தப் படம். மலையாளத்தில் படத்தினை இயக்கிய சசிசங்கர்தான் இந்தப் படத்தினை இயக்கி வெற்றிபெற வைத்திருக்கின்றார்.

கூன் விழுந்த பாத்திரத்தில் சின்னாவாக வருகின்ற சூர்யாவுக்கு யாரும் பெண் கொடுக்கமுன்வரவில்லை. இந்த நிலையில் பார்வையற்ற பெண் செம்பகம் (ஜோதிகா) மேல் காதல் கொள்கின்றான் சின்னா. ஆனால், ஜோதிகாவிடம் தன் அருவருப்பான தோற்றத்தைக் காட்டவில்லை. செண்பகத்திற்கு கண்சத்திர சிகிச்சை செய்து இவள் பார்வைக் குறைபாட்டினை நீக்குகின்றான் சின்னா.



சூர்யா சின்னாவாக நடிக்கின்ற பொழுது, தான் இன்னொரு கமல் என்பதை நிரூபித்திருக்கிறார். அற்புதமான மனதைப் பிசையக்கூடிய நடிப்பு. அதேவேளை, கோபக்கார இளைஞன் கார்த்திக்காக ஆக்ரோஷமான நடிப்புடன் இன்னொரு சூர்யா, ஜோதிகாவும் இரட்டை வேடத்தில் இன்னொரு பாத்திரத்தில் பொலிஸ் அதிகாரியின் மகளாக வருகின்றார்.

இரண்டு சூர்யாக்கள் மற்றும் இரண்டு ஜோதிகாக்கள். கல்யாணப் புரோக்கராக படம் முழுக்க விவேக்கின் காமெடி மழை. 'அம்புலிமாமா...' என்ற பாடலுக்கு மட்டும் மாளவிகா என்ற சிறு மசாலாவைப் பாவித்திருக்கிறார்கள். புதுமுக வில்லன் பாபு தன்னுடைய பங்குக்கு மிகச் சிறப்பாக நடித்து ரசிகர்களின் மனங்களில் நிற்கின்றார். கதை நடக்கும் இடம் கிராமமா அல்லது நகரமா என்று தெரியவில்லை.

யுவன் சங்கர்ராஜாவின் இசையில் பாடல்கள் ஹிட். ரத்னவேலுவின் படப்பிடிப்பு கேரளாவின் இயற்கை அழகை அருமையாகக் கண்முன் கொண்டு வந்திருக்கிறது.

வழக்கமாக இரட்டை கதாநாயகர்களில் அவலட்சணக் கதாநாயகனைச் சாகடிப்பது வழக்கம். இந்தப் படத்தில் அதனை மாற்றியமைத்த சசி சங்கருக்குப் பாராட்டுக்கள். 'பேரழகன் மனதில் நிற்கின்றான்'

- PNS

# எரிமலை வெடிப்பு



1783 ஆம் ஆண்டு ஐஸ்லாந்தில் எரிமலை வெடித்தபொழுது இங்கிலாந்தில் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது. எரிமலை வெடித்த பொழுது தோன்றிய வாயுக்களும், துணிக்கைகளும் இந்த மரணங்களுக்கு காரணமாக அமைந்திருந்ததாக விஞ்ஞானிகள் தெரிவித்திருந்தனர். 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

காலநிலை தொடர்பான தகவல்களும், புதைக்கப்பட்டவர்களின் கணிப்புக்களின் மூலமும் இந்தத் தகவல்கள் பெறப்பட்டிருந்தன.

1783 ஆம் ஆண்டு யூன் மாதம் லக்கி கிரேற்றர் எரிமலை வெடித்தபொழுது 122 மெகா தொன் கந்தக ஒக்சைட்டு வளிமண்டலத்தில் பரவியிருந்தது. இதனால், ஐஸ்லாந்தில் 9 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டனர்.

மக்கள் தொகையில் 1/2 பங்கினர் இதனால் கொல்லப்பட்டனர். அத்துடன், 404 கிறிஸ்தவ ஆலயங்களில் புதைக்கப்பட்டவர்களின் தொகை கணிக்கப்பட்டிருந்தது. இந்தக் காலத்தில் பஞ்சம் தோன்றியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. செம்மறி, மந்தைகள், புளோரின் என்பதும் இரசாயனப்பதார்த்தத்தினால் நஞ்சாக்கப்பட்டு, புல்லை மேய்ந்ததனால் இறந்ததாகவும், இதனால் மக்கள் மத்தியில் பஞ்சம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# வேண்டாம் வீட்டுத் தொலைபேசி

மக்கள் கூடுதலாக வீட்டுத் தொலைபேசிகளை விட்டு கையடக்கத் தொலைபேசிகளுக்குப் படிப்படியாக மாறிக்கொண்டு வருகின்றார்கள். இதற்கு அவர்கள் கூறும் முக்கிய காரணம் அதிகரித்து வருகின்ற வீட்டுத் தொலைபேசிக் கட்டணங்கள்தான்.




கையடக்கத் தொலைபேசி நிறுவனங்களுக்கும் மற்றும் வீட்டுத் தொலைபேசி நிறுவனங்களுக்கும் இடையே ஆரோக்கியமான போட்டி இருப்பது யாவருமறிந்த ஒன்று. இருந்தாலும், கையடக்கத் தொலைபேசியில் இருக்கக்கூடிய 90 வீதமான வசதிகள் இநத வீட்டுத் தொலைபேசிகளில் இல்லை. சிலர் கூறும் காரணம- பணச்சிட்டைத் தொல்லை கையடக்கத் தொலைபேசிகளில் இல்லை என்பது. இன்னுமொரு இனிப்பான செய்தி எதுவெனில் நிலையான தொலைபேசியழைப்புக்களுக்கான கட்டணமாக 50% மான அழைப்புக்களுக்கு, 63% ஆக 2009 ஆம் ஆண்டுமுதல் அமுல்படுத்தப்படவிருக்கின்றது.

வீடுகளில் காணப்படுகின்ற சிறுவர்கள் வீட்டுத் தொலைபேசிகளை அவ்வளவாக விரும்புவதில்லை. வீட்டுத் தொலைபேசிகளை விழுத்தும் நோக்கிலேயே 3 ஜீ வொடபோன் மற்றும் புளூபோன் ஆகியன பல தரப்பட்ட புதிய புதிய அமைப்புக்களைத் தங்களுடைய நிறுவனத் தயாரிப்புக்களில் புகுத்தி மேலும் மெருகூட்டத் தொடங்கியிருக்கின்றன. நவீன கையடக்கத் தொலைபேசிகளிலுள்ள முக்கிய அம்சம் இண்டநெட், ஈமெயில் ஆகும். இதன் காரணமாகத்தான் மேசைத் தொலைபேசியின் விற்பனையில் ஒரு சரிவுத் தன்மை இருக்கத்தான் செய்கிறது.

# குற்றவாளிகள் உஷார்

அண்மைக்காலமாக லண்டனில் நடைபெறுகின்ற குற்றச் செயல்களைத் தடுக்குமுகமாக புதியவகை உத்தி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சிசி ரிவி கமராக்கள் கூடுதலான இடங்களில் பொருத்தப்படுகின்றன. இவ்வகையான கமராக்கள் ஆள் அரவமின்றி தன்னிச்சையாக இயங்கக் கூடியவை. அத்துடன், மிகவும் விலை கூடியதாகவும் காணப்படுகின்றன. இவ்வகையான கமராக்கள் எல்லாம் ஒரு நெட்வேர்க் அமைப்பில் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றினை வைத்துக்கொண்டு இலகுவில் குற்றச்செயல் செய்தவர்களைக் கைது செய்யலாம் என்பது பொலிஸாரின் கருத்து. இதனைவிட வை.வி.பி என்ற தொழில்நுட்பத்தின் மூலம் குற்றச் செயல்களைக் கண்டறியும் முறை மிகவும் பிரசித்தி பெற்றதாகக் காணப்படுகின்றது. இது மிகவும் மலிவானதாகவும் அத்துடன் சிசி ரிவி அளவுக்கு வேக மற்றதாகவும் காணப்படுகின்றது.




ஆனால், இவை தொலைக் காட்சிப் பெட்டிகள் மூலம் பார்க்கக்கூடியளவுக்கு வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கெல்லாம் சவால்விடுவதுபோல, தற்போது வந்திருக்கின்ற புதியவகை வயர்லெஸ் அமைப்பின்மூலம் குற்றம் செய்தவர்கள் மற்றும் குற்றச் செயல்கள் ஆகியவற்றினை வளிமண்டலத்தினூடாக கம்பியில்லாத் தந்திமூலம் கடத்தக்கூடிய முறைவந்திருக்கின்றது.

எது எப்படியிருந்தாலும், முதல் தடவையாக நாட்டின் பாதுகாப்புக்குத் தொழில்நுட்பம் நல்ல முறையில் பயன் படுத்தப்படுகிறது.

# பழைய கருவில் குழந்தை

21 ஆண்டுகள் உறைநிலையில் வைக்கப்பட்டிருந்த ஆணின் கருவொன்று கருக்கட்டலுக்கு பாவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த கருவின் மூலம் பெண் ஒருவர் ஆண் குழந்தையொன்றைப் பெற்றுள்ளார். மான்செஷ்டர் வைத்தியசாலையொன்றில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.



இந்தக் குழந்தையின் தந்தை 17 வயதாக இருக்கும்போது ஆண் விந்தை (**Sperm**) உருவாக்கும் உறுப்புக்களில் புற்று நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார்..

இதனால், இவர் இன விருத்தி செய்யும் திறனை இழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்திருந்தனர்.

இதனால், உயிருள்ள ஆண் கருவை உறை நிலையில் சேமித்து வைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. திருமணம் நடைபெற்ற பின் சேமித்து வைக்கப்பட்டிருந்த ஆண் கருவை பெண்ணின் முட்டையுடன் இணைத்து குழந்தை ஒன்றைக் கருக்கட்டுவதற்கு வழிகளை மேற்கொண்டிருந்தனர்.

இதன்மூலம் நீண்ட காலம் பாதுகாத்து வைத்திருந்த கருவின் மூலம் உயிரை மீண்டும் உருவாக்குவதற்கான வழிமுறைகள் கண்டறியப்பட்டுள்ளதாக முளையம் தொடர்பான (**Embry Logist**) அறிவியலாளர் கிரிக்கோன் தெரிவித்தார்.

பிரித்தானியாவில் ஆணின் கருவொன்றை 55 ஆண்டுகள் வயதினை அடையும் வரை பாதுகாத்து வைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

# முடிப்பயிர்ச் செய்கை

முடி உதிர்கின்றதே என்ற கவலை பெண்களிலும் பார்க்க ஆண்களுக்கு அதிகமாகக் காணப்படுகிறது. அதிலும் சில ஆண்கள் இதன்காரணமாக மிகவும் கவலையுடையவர்களாக இருக்கிறார்கள்.



முடி உதிர்வது எங்களுடைய தவறல்ல. அது நிற மூர்த்தங்களில் தங்கியுள்ளது. அது தற்போது எவ்வகையான நிறமூர்த்தம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. எமது உடலில் காணப்படும் பிறிசில்ட் ஆறு என்ற நிறமூர்த்தமே மிக முக்கியமாக எமது உடலில் காணப்படுகின்ற எல்லா வகையான முடியையும் தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றது.

எலிகளில் செய்த ஆராய்ச்சிகளின் பலனாக உடலில் காணப்படுகின்ற எல்லா வகையான முடிகளும் ஒரே அமைப்பினை ஒத்தாகவே காணப்படுகின்றன. தலையில் சுருள் முடி காணப்பட்டால் உடலின் எல்லாப் பாகங்களிலும் சுருள் முடியே காணப்படுகின்றது. ஆனால், ஆரம்பத்தில் எந்த முடி உதிரும் என அறியமுடியாதிருக்கின்றது.


ஒரு குடும்பத்திலுள்ள ஒருவருக்கு முடி உதிர்ந்தால் மற்ற எல்லாக் குடும்ப உறுப்பினர்களுக்கும் முடி உதிரும் என்பதில்லை. அதற்குக் காரணம் அவரவர் உடலில் காணப்படக்கூடிய குருதிச் சுற்றோட்டத் தொகுதிதான் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

கண்கள், தலைப்பகுதி ஆகியவற்றுக்குச் செல்கின்ற இரத்தத்தின் அளவும், இதற்கு ஒரு காரணியாக அமைகின்றது. ஒருவருடைய முடியை வைத்துக்கொண்டு அவருடைய பரம்பரை அலகுகள் பற்றி ஆராயக்கூடிய வளர்ச்சி தற்போது காணப்படுகிறது. இதன்மூலம், எவ்வகையான மயிர்வேர்களை நடமுடியும் என்பதனையும் தீர்மானிக்கமுடியும்.

## நூல் நிலைய எரிப்பின் நினைவுநாள் இன்றாகும்

சுமதி கனகரெட்னம்

# யாழ்.பொதுசன நூலகம் தமிழரின் கலாசார சின்னம்



ஈழத்தமிழ் மக்களின் கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் கல்வியின் வெளிப்பாட்டுச் சின்னங்களாக திகழ்ந்த யாழ். நூலகத்தின் இழப்பு ஒரு தனி நூலகத்தின் இழப்பன்று. கல்வியை வாழ்வின் அடிநாதமாகக் கொண்டு உருவாகிவந்ததொரு சமூகத்தின கலாசார படுகொலையாகும். யாழ்ப்பாண பொதுசன நூலகம் எத்தகையவர்களால் தாக்கப்பட்டதென்பது யாவரும் அறிந்த ஒன்றாகும். இந்த வித அநாகரிக முயற்சி இந்தக் கால வரலாற்றில் இடம்பெறாத ஒன்றாகும்.

'எண் என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு'

என்பது தெய்வப் புலவர் திருவள்ளுவர் வாக்கு. கற்றவர்கள் கண்ணுடையவர் கல்லாதவர் கண்ணிருந்தும் இரண்டு புண்ணுடையவர் எனக் கூறியுள்ளார். கல்வியின் முக்கியத்துவம் இதன்மூலம் உணர்த்தப்படுகின்றது. எல்லா நாடுகளிலும் கல்விக்குப் பெருமை அதிகம். ஆனால், எங்கள் பழைய தமிழ் நூல்களில் கல்விக்குக் கொடுக்கப்பட்ட தனிப்பெருமை மிகமிக அதிகம். கல்வி அறிவு இல்லாதவர்களை மிருகத்துக்கு ஒப்பிட்டார்கள் தமிழ் மக்கள். இவ்வாறான தமிழ் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்து காணப்பட்டது யாழ். பொதுசன நூலகமாகும்.

யாழ்ப்பாண பொதுசன நூலகம் - அறிவுப் பசி கொண்டோருக்கு உணவளிக்கும் பண்டசாலையாக மட்டும் உருவாக்கப்படவில்லை. வயோதிபர்களுக்கான பொழுதுபோக்கு நிலையமாகவும், முதுமாணிப் பட்டம் பெறுவோருக்கான உபகாரசாலையாகவும் மட்டுமல்லாமல் அமெரிக்க காங்கிரஸின் நூல் நிலையம் பிரிட்டிஷ், மியூசிய நூல் நிலையம் ஆகியவற்றைப் போல, ஈழத்தவர்க்கான ஒப்பற்ற தேசிய நூல் நிலையமாக விளங்கியது.

ஈழத் தமிழர் ·தன்மான உணர்வினதும், தனித்துவ அடையாளங்களினதும், அறிவுத் தாகத்தினதும், விருத்திவேட்கையினதும், சமூக வாழ்க்கையினதும், ஆன்மீக உபாசனையினதும், தெய்வீகக் குறியீடாகத் திகழ்ந்தது யாழ்ப்பாண பொதுசன நூலகமாகும். 11.11.1933 இல் உருவாகி ஒரு கொட்டிலில் தவழ்ந்து, ஒரு கடையில் எடுத்தடி வைத்து, இன்னொரு கடையில் சிறுநடை நடந்து, ஒரு வீட்டின் மாடியில் ஓடியாடித் திரிந்து, ஓர் அழகிய மாடிக் கட்டிடத்தில் ஒளிவீசி உலகப் புகழ்பெற்றது.

வண.லோங் அடிகளாரின் வேண்டுகோளின் பேரில் டாக்டர்.எஸ்.ஆர். ரங்கநாதனும், கட்டடக் கலை நிபுணர் நரசிம்மனும் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து, யாழ்.கோட்டை முனியப்பர் கோயிலடிப் பிரதேசத்தை நூலகம் அமைப்பதற்குப் பொருத்தமான இடமாகத் தெரிவுசெய்தனர். அத்துடன், 16.10.1953 இல் நூலகக் கட்டட வரைபடத்தையும் தயாரித்து வழங்கினர். 29.03.1954 இல் தமிழ் சம்பிரதாய முறைப்படி அடிக்கல் நாட்டப்பட்டது.

11.10.1959 அன்று நூலகத்தின் முதற்கட்டடம் பூர்த்தியாக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டது.

03.11.1967 இல் சிறுவர் பகுதியும், 1971 இல் கேட்போர் கூடமும், 1973 இல் நூலகத்தின் இரண்டாவது கட்டடமும் பூர்த்தியாக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது. 1967 இல் யாழ்ப்பாணத்தில் இயங்கிய அமெரிக்கத் தகவல் நூலகம் இந்த நூலகத்துடன் இணைக்கபட்டு - தளபாடங்கள், ஆவணங்கள், 16mm படம் காட்டும் கருவி, 02 பணியாளர்கள் அனைத்தும் சேர்க்கப்பட்டன. இவ்வாறு திறந்து வைக்கப்பட்ட நூலகம் 1981 ஆம் ஆண்டுவரை அரிய சேகரிப்புகளுடன் சிறப்பாக செயற்பட்டு வந்தது. நூலகம் எரிக்கப்பட்டபோது, 97000 நூல்களும், 1000 கையெழுத்துப் பிரதிகளும் நூலகத்தில் இருந்தன. ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்களான காமினி திசாநாயக்காவும், சிறில் மத்தியூவும் நூலகத்திலிருந்து 200 யார் தூரத்துக்குள் இருந்தநேரம் நூலகம் எரிக்கப்பட்டது. தேடக்கிடைக்காத ஏராளமா்ன அரிய நூல்கள் எரிந்து சாம்பராகின.

அமரர் செல்லப்பா போன்ற இந்தநாட்டின் பரோபகாரிகள் தொடக்கம் யாழ்ப்பாணம் பெற்றெடுக்காத அருந்தவப்புதல்வன் வணக்கத்துக்குரிய லோங் சுவாமிகள் வரைக்கும், அரை நூற்றாண்டு காலத்தில் கட்டியெழுப்பிய கலைக் கோவில் இது. தாவீது அடிகளார் பன்மொழிப் புலவராய்ப் புகழ் பூத்தவர். அவர் நூல்களைத் தம் உயிரிலும் மேலாக நேசித்தார் என்பது உணமை. 1981 ஆம் ஆண்டு நூலகம் எரியுண்டது என்ற செய்தியை கேட்ட மாத்திரத்திலேயே அவர் தனது இன்னுயிர் நீத்தார்.

யாழ்ப்பாண நூல் நிலையம் ஈழத்தமிழர் நெஞ்சங்களிலே எத்தகையதோர் உன்னத இடத்தினைப் பெற்றுள்ளது என்பதை நிறுவும் குறியீடுதான் அவர் மரணம். யாழ்ப்பாணம் நூல் நிலையம் மீண்டும் பழைய மகோன்னத நிலையை அடைந்து ஞானத் தேடலையே இறை வழிபாடாகத் தரிசிக்கும் ஈழத்தமிழர்கள் அச்சமின்றி சா்வ சுயாதீனத்துடன் அந்த ஆலயத்திலும் வழிபடும் உரித்தாளிகளாக மாறுவார்களோ என ஆவலுடன் எதிர்பார்த்திருந்த நாள் நிறைவுபெற்றுள்ளது என்றே கூறலாம்.

யாழ்.மாநகரசபை 1981 இன் பின்பு கிளை நூலகங்கள் பலவற்றைத் திறந்து, மக்கள் சேவைக்கு அரும்பணியாற்றிவந்தது. நல்லூர், வண்ணார்பண்ணை, குருநகர், சுண்டுக்குளி என மக்கள் அருகிலேயே சென்று, தமது அறிவுப்பசியை ஆற்றிக்கொள்ள வழிவகை செய்த பெருமை யாழ்.மாநகர சபையையே சாரும். இராணுவம் குடாநாட்டைக் கைப்பற்றும் வரையில் இந்த நூலகங்கள் சிறப்பான முறையில் மக்களுடைய தேவைகளை நிறைவேற்றக்கூடியவையாக செயற்பட்டு வந்தன.

1995 பிற்பகுதியில் இராணுவம் குடாநாட்டைக் கைப்பற்றிய பின்னர் கிளை நூலகங்களில் இருந்த ஆயிரக்கணக்கான நூல்கள் காணாமற்போய்விட்டன. ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின்போது எரித்துச் சாம்பராக்கப்பட்ட நூலகத்தை, மீண்டும் நிர்மாணிக்கும் பணியைப் பொதுசன ஐக்கிய அரசாங்கம் மேற்கொண்டது.

**யாழ்ப்பாண பொதுசன நூலகம் நாசகார சக்திகளினால், 1981.06.01 நள்ளிரவு தீயிட்டு எரியூட்டப்பட்டு, 23 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள இன்றைய நாளில் இதனை நினைவுகூரும் முகமாக இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

இலங்கை அரசாங்கத்தின் தபால், தந்தித் தொலைத் தொடர்பு அமைச்சரான மங்கள சமரவீரவினால் 14.01.1998 ஆம் திகதி யாழ்ப்பாணம் தேசிய வீடமைப்பு அதிகாரசபை கட்டடத்தில் யாழ். நூலகத்துக்கான இடைக் கால நூலகம் திறந்து வைக்கப்பட்டது.

அமைச்சர் - வெண்தாமரை இயக்கத்தின் தலைவரும் கூட, வெண்தாமரை இயக்கம் 1995 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இனங்களுக்கிடையே நல்லுறவை வளர்ப்பது இந்த இயக்கத்தின் பிரதான நோக்கம். யாழ்ப்பாண நூலகத்தைப் புனர்நிர்மாணம் செய்தல் தொடர்பான பணிகளையும் இந்த இயக்கமே பொறுப்பேற்றிருந்தது. இதற்காக நூலும் செங்கல்லும் என்ற ஓர் இயக்கத்தை நாடளாவிய ரீதியில் இது ஆரம்பித்திருந்தது. புத்தகம் அறிவுக்கும், செங்கல் இன ஐக்கியத்துக்குமான அத்திவாரக் குறியீடாகும். தென்கிழக்காசியாவின் மிகப் பெரிய நூலகங்களில் ஒன்று எனப் புகழ்பெற்ற யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் கருகிப்போய் 18 வருடங்கள். இந்த வேளையில் பழைய இடத்தில் மீண்டும் நூலகத்தைப் புனரமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயங்களுக்குப் பரிகாரம் தேடும் முயற்சியில் ஒன்றுதான் இது என, நூலகத்தைத் திறந்து வைத்த அமைச்சர் மங்கள சமரவீர கூறியிருக்கிறார். தமிழர்களால் வரவேற்கப்படவேண்டிய ஒரு விடயம்தான். இது இன்றைய நாளில் மீண்டும் மக்கள் சேவைக்கு நவீன மயப்படுத்தப்பட்ட நூலகமாக ஆரம்பித்து இயங்க ஆரம்பித்துள்ளமை மிகப்பெரிய வரப்பிரசாதமாகும். எனினும், இழக்கப்பட்ட நூல் களை யார் ஈடுசெய்வார்கள்.

புனரமைக்கப்பட்ட நூலகம் இலங்கை தேசிய நூலக ஆவணாக்கல் சபையின் ஆலோசனைப்படி துரைராஜா அசோசியேட்ஸ் நிறுவன திட்டமிட லில் புனரமைக்கப்பட்டுள்ளன.

இந்தநூலகத்தில் உசாத்துணைப்பிரிவு, விஷேட நூற் சேர்க்கைப்பிரிவு, கணினிப் பிரிவு, வீடியோப்பிரதி, செவிப்புலச் சாதனப் பிரிவு, இரவல் வழங்கும் பிரிவு, சிறுவர் பிரிவு, வலது குறைந்தோர்கள் படிக்கக் கூடிய பிரிவு, நூலீட்டல் பிரிவு, 80 பேர் ஒரே நேரத்தில் இருந்து அவதானிக்கக்கூடிய கேட்போர் கூடம் என்பன அமைக்கப்பட்டுள்ளன. நூலகத்தின் சில பிரிவுகள் குளிரூட்டப்பட்டுள்ளன. இந்தப் பிரிவுகள் யாவும் தொழிற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

தற்போது நூலகத்தில் ஏறத்தாழ 40,000 ஆயிரம் நூல்கள் பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ளன. இந்த நூல்களில் பெரும்பாலானவை நிறுவனங்கள், வெளிநாடுகள், நலன்விரும்பிகளால் அன்பளிப்பாக வழங்கப்பட்டவையாகும். இவையாவும் பாடரீதியாக பகுக்கப்பட்டு, பட்டியல் படுத்தப்பட்டுள்ளதுடன், கணினிமயப்படுத்தலிற்கான வேலைகள் நடைபெற்று முடிவடையும் நிலையில் இருக்கின்றது. கணினிப்பிரி வில் 10 கணினிகள் இணையத்த[illegible] வசதியுடன், வாசகர்கள் தகவல்களைப் பெ[illegible] ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நூலக கணினிமயப்படுத்தல் வேலைத் திட்டத்தை UNESCO நிறுவனம் பொறுப்பேற்று செய்து வருகின்றது. அத்துடன், நடமாடும் நூலக சேவைக்கான வாகனத்தையும் ஏற்பாடு செய்துள்ளது. இதற்கெல்லாம் போர்ட் பவுண்டேஷன் நிறுவனம் நிதி உதவி UNESCO நிறுவனத்துக்கு செய்துள்ளது. கட்டடத் திணைக்களம் புனரமைப்பு வேலைகளைத் திறம்பட செய்து முடித்துள்ளது: நூலகத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள அழகான பூங்கா வாசகர்களை மேலும் வாசிக்கத் தூண்டுவதாகவுள்ளது.

நூலகத்தின் மூன்றாம் மாடியாக விளங்கும் பகுதி கலைக்கூடமாக மாற்றப்பட்டுள்ளது. அங்கு பிரபலமான ஓவியர் ஒருவரின் பல ஓவயங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. எதிர்பாராத தடங்கள்கலினால் நூலகம் மாலை நேரங்களில் மட்டுமே திறக்கப்படுகிறது. மிக விரைவில் முழுநேர சேவையை வழங்க வேண்டுமென எதிர்பார்க்கின்றோம்.

மோகனகாந்

# யாழ். பொது நூலக எரியூட்டல் ஒரு பண்பாட்டுப் படுகொலை

அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் தமிழ் மக்களின் பண்பாடுகளின் அதி உச்சமாய், அதிஉச்ச வெளிக்காட்டலாய், பொதுசன நூலகம் 1981 ஆம் ஆண்டு ஜூன் 1ல் சிங்கள இனவாத அமைச்சரான காமினிதிசநாயக்கா யாழ்ப்பாணத்தில் நின்றிருந்தவேளை இலங்கை இனவாத அரசின் கூலிப்படைகளான பொலிஸாரினாலும், காடையராலும் எரித்து நாசமாக்கப்பட்டுள்ளது. இந்த அறிவாலயத்தை இழந்து தலைமுறை தலைமுறையாக எழுந்து வரும் நம் சந்ததிகளுக்கு சரித்திரம் மாறாத நிகழ்வான எம் அறிவாலய எரிப்பினை நினைவூட்டி வலுவூட்டுவது எம் பொறுப்பாகும்.

யாழ்ப்பாண மக்களின் அறிவியல் பொக்கிசத்தின் எரியூட்டலை, உலக நாடுகள் அனைத்தும் கண்டித்தன. ஈழம் பூராவும் கடுமையான எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடரப்பட்டன. புனித ஆலயங்களை நிறுவும், டெல்ரா. செயல்திட்டம் 1.6.1981 ஆம் ஆண்டில் கைசாத்திடப்பட்டது. ஆனால, முன்னைய இரவிலே இந்த அறிவாலயத்தினை கொளுத்திவிட்டனரே? 23 வருடங்கள் இன்றுடன நிறைவடைந்து யாழ்ப்பாண பொது நூலகம் மீண்டும் புதுப்பொலிவுடன் எழுந்து நின்றாலும், எரிந்தபின் விசாரணை புனருத்தாரணம் என்று பூசி மெழுகினாலும், தென் கிழக்காசியாவின் முதன்மையாக விளங்கிய யாழ்ப்பாணத்திலிருந்த அச்சியந்திர சாதனங்கள் ஏடுமுன்பாக கையால் எழுதப்பட்ட சுவடிகள், பனையோலை வாசகங்கள் இப்படியாக



தொல்பொருள் களஞ்சியங்களை மீளப்பெற இயலுமா?

'நூலக காங்கிஸிலும்' யாழ் நூலகம் அங்கத்துவம் வகித்தது. இலங்கையிலிருந்து வெளியிடப்படும் - சஞ்சிகைகள், நூல்கள் இந்த நூலகத்தினூடே வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அப்படியான ஒரு அறிவாலயத்தை எதிர்கால வாழ்வின் சுபீட்சத்துக்காக, அறிவு வளர்ச்சிக்காக முன்னின்ற அறிவகத்தினை இழந்துபோய்நிற்கும் மனங்களில் நெருடல்கள் வருடிக் கொண்டிருக்கின்றது. எமக்கென ஜீவித்த ஆலயம் தீயுடன் சங்கமாகி இன்றுடன் 23 வருடங்கள் நிறை வடைகின்றன. நூலக எரிப்புகள் என்பது, அத்துடன் நிறைவடையவில்லை. இலங்கை இராணுவத்தால் 1984 ஆம ஆண்டில் பருத்தித்துறை ஹாட்லிக கல்லூரி நூலகம் எரித்தழிக்கப்பட்டது. வல்வெட்டித்துறை நூலகம் (பொதுசன சமூக நிலையம்) 30 இளைஞர்களுடன குண்டு வைத்து தகர்க்கப்பட்டது. காரைநகர் யுனிபோ நூலகம் 1985 ஆம் ஆண்டில் கடற்படையால், நிர்மூலமாக்கப்பட்டது. திருகோணமலையில் பல்வேறு நூலகங்களும் எரிக்கப்பட்டுள்ளன. இந்த வகையான அறிவாலயங்களை அழித்து தமிழ் பேசும் மக்களின் மொழி, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை பூண்டோடு ஒழிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

97 ஆயிரம் நூல்களுடன் தென் கிழக்காசியாவின் மிகப் பெரும் நூலகமானது இழக்கப்பட்டது. தனியொரு நூலகத்தின் இழப்பல்ல. கல்வியை வாழ்வின் அடி நாதமாகக் கொண்டு உருவாகி வந்ததொரு சமூகத்தின் கலாசாரப் படுகொலையாகும். நூலகம் எரியூட்டப்பட்ட செய்தியைக் கேட்ட தாவீது அடிகளார துயரததால் சில நாட்களில் மரணமானார். இந்த ஒரு வேளையில் எம் அறிவுப் பொக்கிஷத்தின் வரலாற்றைப் பின்னோக்கிப் பார்ப்பது சாலப் பொருத்தமானது. 1934 ஆம் ஆண்டு கலாநிதி ஜகாக் தம் மையா என்பவரின் தலைமையின் கீழ் ஜூன் மாதம் ஆறாம் நாளன்று இடம்பெற்ற கூட்டமே அடி கோலியது. காரியதரிசி திரு. க.மு.செல்லப்பா கஷ்டப்பட்டுத் திரட்டிய ஆரம்ப மூலதனமாக 1184.82 சதம் ஆகும்.

பின்பு 1934 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 1 ஆம் திகதி 844 நூல்களுடனும் 30 பகுதி வெளியீடுகளுடனும் ஆஸ்பத்திரி வீதியில் வாடகை வீட்டில் ஆரமபிக்கப்பட்டது. நிதிவசதியில்லாமை காரணமாக பட்டினசபை பொறுப்பேற்க முற்பட்டது. பின்னர் வாசகரின் பெருகிவரும் தேவை களை கட்டுப்படுத்த முடியாமல் போகவே நவீன வசதிகளுடன் கூடிய பொதுநூலக அமைப்பிற்கான முயற்சிகள் 1952 ஆம் ஆண்டு ஆனி மாதம் 14 ஆம் திகதி சாம்.ஏ. சபாபதி தலைமையில் நடைபெற்ற மாநாட்டின் மூலம் ஆரம்பிக்கப்பட்டது.

*(10 ஆம் பக்கம் பார்க்க....)*

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு*
*மாடுஅல்ல மற்றை அவை.*

திருக்குறள்

# நமது நோக்கு

## துப்பாக்கிகளை விடவும் எழுதுகோல் வலிமையானது...

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளின் அடித்தளத்தையே வலுவாக - நம்பிக்கையூட்டும் வகையில் - அமைக்கமுடியாத சூழல் இறுக்கமாகி வருகின்ற நிலையில், அது குறித்து அரசினதும், ஜனாதிபதியினதும் எதிர்கால நிலைப்பாடு எப்படி இருக்கும் என எதிர்வுகூறல் செய்யமுடியாது. சமாதானம் தொடர்பான அக்கறைகொண்ட அனைவரும் ஒருவிதமான சோர்வு நிலையிலேயே உள்ளனர். இதனை நம்பிக்கையற்ற நிலை என்றுகூடக் கூறலாம்.

இதனை உறுதிப்படுத்துமாப்போன்று புதிய அரசு பதவி ஏற்றதிலிருந்து அரசின் செயற்பாடுகள் குறித்து அன்றாடம் வெளிவரும் செய்திகளும், தகவல்களும் சமாதானம் குறித்த அரசின் விசுவாசத்தை முற்றும் முழுதாகச் சந்தேகிக்க வைப்பதாகவே உள்ளது.

எல்லா வகையிலும் சமாதானத்தை எதிர்க்கும் இனவாத சக்திகளை தன்னுள் வாங்கிக்கொண்டு அவர்களின் அபிலாஷைகளுக்கேற்ப செயற்படமுனையும் இன்றைய அரசு இனப்பிரச்சனைக்கு தீர்வுகாண்பதற்கு தீவிரமாக முயற்சி செய்து கொள்வதாகக் காட்டிக்கொண்டு - வெளிப்படையாக பிரசாரத்தை செய்துகொண்டு - இன்னொருபுறம் மறைமுகமாக அதனை ராஜதந்திர ரீதியில் மிகநுட்பமான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மீண்டும் யுத்த சூழ்நிலை ஒன்றை உருவாக்கும் 'சதி'யில் ஈடுபட்டு வருகின்றதோ என்ற சந்தேகமும் வலுப்பெற்றுக்கொண்டே வருகின்றது.

பாதுகாப்பு ஒப்பந்தங்கள், இராணுவத்துக்கான ஆட்சேர்ப்பு, படைத்தரப்பை நவீனமயப்படுத்தல், நவீன ஆயுதக் கொள்வனவு என்று அரச வட்டாரங்களில் இருந்துவரும் செய்திகள் யாவும் சமாதானத்துக்கான எதிர்பார்ப்புக்களை சிதைப்பனவாகவே உள்ளன.

எல்லாவற்றையும்விட கிழக்கில் கடந்த சில வாரங்களாக நடைபெற்றுவரும் வன்முறைகள், கொலைகள் போன்றவை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருந்துவரும் ஆயுத பாணிகளாலேயே மேற்கொள்ளப்படுகின்றன என்ற விடயம் சமாதானத்துக்கான மிக மோசமான அச்சுறுத்தலாக விஸ்தாரமடைந்து வருகின்றது.

அடுத்தடுத்து பல தடவைகள் விடுதலைப் புலிப் போராளிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள், கொலைகள், கிழக்குப் பல்கலைக்கழக பொருளியற்துறைத் தலைவர் தம்பையா படுகொலைச் சம்பவம் எனத் தொடர்ந்த வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில் யார் இருந்தார்கள் என்பதை விடவும் இவர்கள் அரசின், அதாவது அரச படைகளின் அனுசரணையுடனேயே இவற்றை மேற்கொண்டுள்ளார்கள் - மேற்கொண்டும் வருகிறார்கள் என்பதே அச்சம் தரும் செய்தியாகும்.

இதனை அரச தரப்பும், படைத்தரப்பும் மறுதலித்தாலும் கூட சம்பவங்கள் நடைபெற்ற தன்மைகள், அவர்கள் கையாண்ட வழிமுறைகள், அவர்கள் சம்பவத்தை மேற்கொள்ள வந்தமுறை, வன்செயல்களைச் செய்துவிட்டு அச்சமோ பதற்றமோ இன்றி தப்பிச்சென்ற விதம் அனைத்தும் இதற்கெல்லாம் பின்னணியில் இருந்து இயக்குபவர்களை துல்லியமாக இனங்காட்டவே செய்கின்றது.

இதனை விடுதலைப் புலிகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும், சமாதான ஏற்பாட்டாளரான நோர்வேத் தரப்பினருக்கும் மிகத் தெளிவாகவே தெரிவித்துள்ளதுடன், தமது கடுமையான கண்டனத்தையும் கூட தெரிவித்திருந்தனர்.

எனினும், இந்த வன்செயல் கும்பலைச் சேர்ந்தவர்களின் நடவடிக்கைகளைத் தடுக்கவோ, கட்டுப்படுத்தவோ அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. அரசு தற்போது தனது ஆட்சியை தக்கவைத்துக்கொள்ளவே 'ததிங் கிணதோம்' போடும் நிலையில், சமாதானத்தை முன்னெடுக்கும் திராணியற்று பிரச்சினையின் போக்கை திசைதிருப்பி, மக்களின் கவனத்தைக் குழப்பி, மீண்டும் ஓர் அச்சமும் பீதியும் மிக்க போர்ச்சூழலை ஏற்படுத்தவே கடுமையாக முயற்சிக்கிறது என்பதையே கிழக்கின் கொலைகளும், வன்செயல்களும், போராளிகள் மீதான தாக்குதல்களும் நிரூபித்து வருகின்றன.

இந்தக்கொலை வெறிக்குழுவினர் தமிழின மற்றும் தேசியப் பற்றாளர்ககளை அதுவும் வடபகுதியைச் சேர்ந்த தமிழ் இன உணர்வாளர்களை இலக்குவைத்து தாக்குவதன் உள்நோக்கம் கிழக்கின் பிரதேசவாத உணர்வைக்கிழறி தமிழ்த் தேசிய ஒருமைப்பாட்டையும், இனப்பற்றையும் சிதைத்து அதன் மூலம் தமிழ் மக்களின் விடுதலை மற்றும் உரிமைப் போராட்டத்தை அழிப்பதேயாகும்.


இந்தவகையில் நேற்றைய தினம் இந்தக் கொலைஞர்களின் சூட்டுக்கு தமிழ்த் தேசியத்தின் மீது பற்றும் உணர்வுபூர்வ ஆர்வமும் மிக்க மூத்த பத்திரிகையாளரும், அரசியல் விமர்சகருமான ஜி.நடேசன் இலக்காகியுள்ளார்.

இவர் அண்மைக் காலங்களில் தனது வலிமையான எழுத்தின் மூலமும் ஆழமான தனது சிந்தனையின் மூலமும் , தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்த அவர் ஆற்றிய சேவைகள், பேரினவாதத்தின் அடி வருடிகளையும், தமிழின விரோத சக்திகளையும், சிங்கள பௌத்த இனவெறி அரசியல் மற்றும் படைத்துறைகளை சார்ந்தவர்களையும் அவர் மீது கோபமும், ஆத்திரமும் கொள்ளவைத்து இந்தக் கொலைக்கு அவர்களை தூண்டிவிட்டது என்றே கிழக்குச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தகைய கொலைகள் மூலம் தமிழ்த் தேசிய உணர்வைத் தகர்த்துவிடலாம் அல்லது பிரதேச வாதத்தைத் தூண்டி சமாதான சூழலை அழித்துவிடலாம் என்றே சம்பந்தப்பட்டவர்கள் கனவு கண்டால் அதற்கு அர்த்தம் ஏதும் இருக்கப் போவது கிடையாது.

நிமலராஜனின் வழியில் இப்போது ஜி.நடேசன்... பத்திரிகையாளர்களைக் கொல்வது, அவர்களின் வழியில் செயற்படும் ஏனையோரின் எழுதுகோலை இன்னமும் கூர்மைப் படுத்தவே செய்யும். வரலாறு இதனை நிரூபிக்கவே செய்யும்.

## நாடும் நடப்பும்




# தூத்துக்குடி - இலங்கை இடையில் கப்பல் சேவை விரைவில் ஆரம்பம்!

## இலங்கைத் தூதர் நம்பிக்கை தெரிவிப்பு

தூத்துக்குடிக்கும், கொழும்புக்கும் இடையிலான சுற்றுலாப் பயணிகள் கப்பல் போக்குவரத்துச் சேவை விரைவில் ஆரம்பிக்கப்படும் என இந்தியாவுக்கான இலங்கைத் துணைத்தூதர் சுமித் நகுந்தலா நம்பிக்கை தெரிவித்தார்.

மதுரைக்கு சென்ற அவர் அங்கு செய்தியாளர்களிடம் பேசுகையில், தூத்துக்குடிக்கும், கொழும்புக்கும் இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்க இலங்கை அரசு ஆவலாக உள்ளது.

இதற்கான பணிகள் அனைத்தும் முடிந்த நிலையில் இப்போது இதை தொடங்குவது சரியாக இருக்காது என்று முதல்வர் ஜெயலலிதா கூறிவிட்டார். ஆனால் தற்போது மாறியுள்ள சூழ்நிலையில் இந்தச் சேவையை தொடங்குவது பொருத்தமாக இருக்கும்.

இந்தக் கப்பல் போக்குவரத்து குறித்து மாநில அரசின் கருத்தை மத்திய கப்பல்துறை அமைச்சகம் கோரியுள்ளது. எனவே விரைவில் இந்தச் சேவைக்கு ஒப்புதல் கிடைக்கும் என்று எதிபார்க்கிறோம்.

கொழும்பு நகரிலிருந்து கொச்சி நகருக்கு கப்பல் போக்குவரத்தை நடத்தினால் சரியாக இருக்காது. இதனால் இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு வரவிரும்பும் தமிழர்கள் பாதிக்கப்படுவார்கள் தூத்துக்குடிதான் இந்தக் கப்பல் சேவைக்கு சரியான நகராகும் என்றார் நகுந்தலா.

# உயர்தர வகுப்புக்களில் ஏதாவது பாடங்களை கற்பதற்கு வாய்ப்பு

(ஆழியவளை )

க.பொ.த உயர்தர வகுப்புக்களில் மாணவர்கள் தாம் விரும்பிய ஏதாவது மூன்று பாடங்களை கற்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கான முன்மொழிவை தேசிய கல்வி ஆணைக்குழு பரிந்துரைசெய்துள்ளது.

க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்கள் இதுவரை காலமும் கணிதப்பிரிவு, விஞ்ஞானப்பிரிவு, கலை, வர்த்தகம் என நான்கு வகைப்பிரிவுகளில் குறிப்பிட்ட பாடங்களை மாத்திரம் தெரிவு செய்து கற்பதற்கு வாய்ப்பளிக்கப் பட்டிருந்தது.

ஆனால் இனி மேல் இந்தமுறை நீக்கப்பட்டு உயர்தர வகுப்பு மாணவர்கள் தாம் விரும்பிய மூன்று பாடங்களைத் தெரிவுசெய்து கற்பதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட பிரிவு என்று பாகுபடுத்தி கற்கைகள் மேற்கொள்ளபபடமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் மூலம் எதிர்காலத்தில் உயர்தர வகுப்பு மாணவரொருவர் தமிழ், கணிதம், இரசாயனவியல் ஆகிய மூன்று பாடங்களையும் கற்கக்கூடிய சூழ்நிலை உருவாகும். தேசிய கல்வி ஆணைக்குழு விதந்துரைத்த இந்தப் பரிவுரையை கல்விச் சமூகம் பாராட்டி வரவேற்றுள்ளது.

(122)

## ஒரு கோடி ரூபா பெறுமதியான கள்ள நோட்டுக்கள் மீட்பு

(கொழும்பு)

கொழும்பு பிரதேசத்தில் கள்ளநோட்டுக்களை அச்சிடும் இடம் ஒன்றை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இங்கிருந்து சுமார் 1 கோடி ரூபா பெறுமதியான கள்ள நோட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் அமெரிக்க டொலர்களும் அடங்கும் என்று தெரியவருகிறது.

சம்பவம் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டு பணம் அச்சிடும் இயந்திரமும் கைப்பற்றப்பட்டது. (01)

## தீர்வையின்றி இறக்கப்பட்ட வாகனங்கள் கைப்பற்றப்பட்டது

(கிளிநொச்சி)

வன்னியில் உள்ள புராதன விகாரை ஒன்றின் பெயரில் தீர்வையின்றி இறக்குமதி செய்யப்பட்ட பெருமளவு வாகனங்கள் சுங்கப் பகுதியினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதற்காகப் பல்வேறு பௌத்த மடங்களின் தலைவர்களது றப்பர் முத்திரைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இன்னமும் பலவாகனங்கள் இவ்வாறான ஒழுங்கின் அடிப்படையில் வெளிநாடு ஒன்றில் இருந்து இலங்கைக்கு வந்துகொண்டிருப்பதாக தெரியவருகிறது. (01)

# கேரதீவு - சங்குப்பிட்டி பாதையைத் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதிக்கு மகஜர்

## யாழ். மாவட்ட அபிவிருத்திச் சங்கம் அனுப்பியுள்ளது.

(யாழ்ப்பாணம்)

கேரதீவு - சங்குப்பிட்டி பாதையை திறந்து மக்கள் பாவனைக்கு விடுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சங்கம் மகஜர் மூலம் கேட்டுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கடந்த கால இராணுவ நடவடிக்கை காரணமாக தென்மராட்சி தெற்குப்பகுதிகளை ஆக்கிரமித்த படையினர் இந்த வீதியைத் தமது பாதுகாப்புக் கருதி மூடியுள்ளதுடன் இந்த வீதியை அண்டிய பகுதிகளையும் இராணுவ உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் முடக்கி வைத்துள்ளனர்.

இதனால் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த மூவாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியேற முடியாத சூழ்நிலை காணப்படுவதுடன் இந்தப் பகுதியிலுள்ள 4000 ஏக்கர் வயல் நிலங்கள் செய்கை பண்ணப்படாதும் இருப்பதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே இவற்றைக் கருத்திற் கொண்டு மேற்படி பாதையை மக்கள் பாவனைக்காக திறந்து விட நடவடிக்கை எடுத்து அப்பகுதி மக்களை மீளக்குடியேற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு அந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது. (17)

அரசியல் நோக்கு

கே.ரி.கணேசலிங்கம்

# குழப்பமான கொள்கைகளை வகுத்துவரும் புதிய இந்திய கூட்டணி அரசு



இந்தியாவின் ஆட்சி அதிகாரத்தைக் காங்கிரஸ் கூட்டணி நிறுவியுள்ளது. இப்புதிய அரசாங்கம் 15 இற்கும் மேற்பட்ட அரசியற் கட்சிகளின் ஆதரவைப் பெற்றிருப்பதுடன் இடதுசாரி மாக்சியக் கட்சிகளின் ஒத்துழைப்புடனும் ஆட்சியமைத்துள்ளது. இப்புதிய ஆட்சியின் பொது வேலைத்திட்டம் அண்மையில் வெளியிடப்பட்டது. அந்த வேலைத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட அம்சங்களையும் அமுலாக்கங்களில் ஏற்படவுள்ள பிரச்சினைகளையும் அதனால் சர்வதேச பிராந்திய மட்டத்தில் எழக்கூடிய திருப்பங்கள் தொடர்பாகவும் விரிவாக நோக்குவோம்.

காங்கிரஸ் கூட்டணியால் வெளியிடப்பட்ட பொதுவேலைத் திட்டம் மூன்று பிரதான அம்சங்களை மையப்படுத்தியிருந்ததை அவதானிக்க முடிகின்றது.

முதலாவது- உள்நாட்டு மட்டத்தில் அல்லது சமூக மட்டத்தில் நிலவிவரும் நெருக்கடிகளுக்கு தீர்வு காணும் நோக்கிலான விடயங்கள் பொடா என அழைக்கப்படும் பயங்கரவாதம் தொடர்பான தடைச்சட்டத்தை நீக்குவது, தெலுங்கானா மாநிலத்திட்டத்தினைச் செயற்படுத்துவது, கடல்நீரை நன்நீராக மாற்றுதல், குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வு காணுதல், காவிரி நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதுடன் இந்தியாவின் நதிநீர்த்திட்டங்களுக்கு பொதுவான செயல் திட்டங்களை முன்வைப்பது, சேது சமுத்திரத் திட்டம், தமிழ் மொழியைச் செம்மாழியாக அறிவிப்பதுடன் மேலும் பல மொழிகளை அலுவலக மொழியாக்குதல், பெண்களுக்கு 33 வீத ஒதுக்கீட்டைச் சாத்தியப்படுத்தல் என்பவற்றைக் காங்கிரஸ் கூட்டணி முன்வைத்துள்ளது. மதநல்லிணக்கம், சமூக உடன்பாடு என்பவற்றையும் மேலதிகமாகச் சேர்த்துள்ளது.

இரண்டாவது அம்சமாக - இந்தியாவின் பொருளாதாரக் கொள்கையை நோக்கமுடியும். ஏற்கனவே பின்பற்றப்பட்டு வரும் பொருளாதாரச் சீர்திருத்தம் தொடரும் என்பதுடன், மனிதநேயத்திற்கு மதிப்பளிப்பதுடன் சராசரி மனிதனின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்தல், விவசாயத் துறையைப் பராமரிப்பதும், ஊக்குவிப்பதும் வேலைவாய்ப்பு, தொழிலாளர் நலன் என்பன பாதுகாப்பதுடன் இலவச மின்சாரத்திட்டத்தினை சட்டரீதியாகத் திருத்தி மீளவழங்குதல், கிராமப்புறத்தின் தரத்தை உயர்த்துவதுடன் தகுந்த பாதுகாப்பை வழங்குதல், இலாபம் தரும் அரச உடமைகளையும், அரச வங்கிகளையும் தனியார் மயப்படுத்தாது பாதுகாப்பது. மொத்தத்தில் கலப்புப் பொருளாதாரத்தை இந்தியாவில் அமுல்படுத்தல்.

மூன்றாவது - இந்தியாவின் புதிய அரசின் புதிய வெளிநாட்டுக்கொள்கையை உள்ளடக்கிய செயல் திட்டமாகும். இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையில் மீண்டும் அணிசேராக் கொள்கை முன்வைக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகளுடனான உறவைக் கைவிடுவதுடன், மீண்டும் பலஸ்தீனத்துக்கு தார்மீக ஆதரவை வழங்குவது பற்றியும், அதற்கான தீர்மானங்களில் பலஸ்தீனத்திற்கு ஆதரவு வழங்குவதும் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கையாகும். வலது சாரி அமெரிக்கச் சார்புக் கொள்கையைக் கைவிட்டு சுயேட்சையான நடுநிலமைப் போக்கை கடைப்பிடிப்ப[illegible] இந்தியாவுக்குரிய வெளிநாட்டுக் கொள்கையா[illegible] நாடுகளுடன் நல்லுறவைப் பேணுவதுடன் பாகிஸ்தானுடன் சுமூகமான உறவைப் பராமரிக்க முயற்சிப்பதும், இலங்கை விடயத்தில் சமாதானம் தொடர்வதுடன் இந்திரா காலக் கொள்கையை கடைப்பிடிக்க முயலுவதையே புதிய கொள்கையாக கொண்டிருக்கிறது.

வெளிப்படையாக இம்மூன்று அம்சங்களையும் அவதானித்தால் - இந்தியா மீண்டும் 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்கோ அல்லது அதன் பின்னரைப் பகுதிக்கோ இழுத்துச் செல்லப்படுவது போலத் தெரிகிறது. அதாவது, நேரு காலம், இந்திராகாந்தி காலம் என்பவற்றுக்கு மீண்டும் இந்தியா நகர்வதனையே இந்தக் கொள்கைகள் காட்டுகின்றன. ஒரு நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையும், பொருளாதாரக் கொள்கையும் ஒரு நாணயத்தின் இரண்டுபக்கங்கள் போன்றது. இவை யிரண்டும் சரியாகப் பின்பற்றப்படுமாயின் உள்நாட்டு அபிவிருத்தி, பாதுகாப்பு என்பன சரியாகவும், நேர்த்தியாகவும் நகரும்.

உண்மையில் காங்கிரஸ் கூட்டணி முன்வைத்துள்ள கொள்கைகள் அமுல் படுத்தப்படுமாயின் அதுவே மிகச் சிறந்த கொள்கையாக இந்தியாவில் திகழும். அவ்வளவுக்கு இந்தியாவின் தனித்தன்மையையும், உருவாக்கத்தன்மையையும் இந்தியாவின் ஆத்மாவையும் அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது இந்தக் கொள்கைகள் இத்தகைய பொருளாதாரக் கொள்கையின் அமுலாக்கம் பற்றி பெரியளவான சர்ச்சை நிலவுகிறது. ஏனெனில் இந்தியாவின் அணுகுமுறைகள் அனைத்தும் 20 ஆம் நூற்றாண்டை நோக்கி நகருகின்றதே அன்றி, 21 ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ப அமையவில்லை. வறுமைக்கும், வேலையினமைக்கும் தொழிலாளர் நலனுக்கும் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்பது யதார்த்தமானது. அது குறிப்பாக நலன் சார் பொருளாதாரம் (**Wel Far Economy Policy**) கொள்கையை அடியொற்றியது. அத்தகைய நலன்சார் பொருளாதர அரசியல்யுகம் தற்போது முடிந்துவிட்டது. உலகம் தற்போது தாராள தனியார் அரசியல் பொருளாதாரக் கொள்கை யின் உயர் புள்ளியை எட்டிவிட்டது. இருபதாம நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து ஆரம்பித்த நலன் பேண் அரசியல் பொருளாதாரக் கொள்கை, நேருவின் ஆட்சிக் காலத்திலும் இந்திராகாந்தியின் ஆட்சிக் காலத்திலும் மிகச் சிறப்பாக விளங்கியது.

இத்தகைய அரசியல் பொருளாதார மாறுதல் காலத்தை சரிவரப் பயன்படுத்தாததன் விளைவாகவே இந்திரா காந்தியை தொடர்ந்து வந்த அரசுகளும் (ராஜீவ் ஆட்சி உட்பட) பாரதீய ஜனதா அரசாங்கமும் தெளிவான, நிலையான மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை. இது பொருளாதார போக்கில் மட்டுமல்ல, பாதுகாப்பு கொள்கையிலும் சரி வெளிநாட்டுக் கொள்கை யிலும் மாறி மாறி வலதும், இடதும் என்ற தளம்பல் நிலவுகின்றது.

இன்று காங்கிரஸ் வகுத்திருக்கும் இடது சாரிக் கொள்கை இதே காங்கிரஸ் கட்சி ராஜீவ் ஆட்சிக்காலத்தில் வலது சாரியாகவே அமைந்தது. இந்தியாவில் இருக்கும் மார்க்சியர்களும் கம்யூனிஸ்டுக்களும் இன்னுமே உலகில் இடது, வலது, நடுநிலமை முடிவுக்கு வரவில்லை. என நினைக்கிறார்கள் போல் தெரிகிறது. அதிலும் குறிப்பாக இடது சாரி அரசியல் தலைவர்கள் உலக மாறுதலை புரிந்து கொள்ளாதவர்களாகவே உள்ளனர். இவர்கள் மட்டுமல்ல காங்கிரஸ் கட்சியின் தலைமைகளும் அப்படியானவைகளாகவே உள்ளன என்றே கருத வேண்டியுள்ளது. அல்லது இவ்வாட்சிக்காரரும் நேரு, இந்திரா போன்று மீளவும் கொள்கையை அதிகமாக வகுத்துவிட்டு அமுலாக்கத்தை நிகழ்த்தாமல் ஆட்சியை முடிப்பவர்களாக மாறப்பேகிறார்களோ தெரியவில்லை.

புதிய அரசின் பொருளாதாரக் கொள்கை எப்படி இன்றைய பொருளாதாரப் போட்டிக்கும், நெருக்கடிக்கும் முகங்கொடுக்கப்போகிறது? உலகமயப்படுத்தலுக்குள் இந்தியாவின் நுழைவை வாஜ்பாய் அரசாங்கம் கணிசமாகச் சாத்தியப்படுத்திவிட்டது. உலகமே உற்பத்தியைக் கடந்து சந்தைக்கான தயார்ப்படுத்தலையும், ஒழுங்கையும் சாத்தியப்படுத்திவருகின்றது. உற்பத்திகளிலும் கூட்டுத் தன்மை பெருகிவிட்டது. ஒரு உற்பத்தியை தேர்ச்சியடிப்படையில் பல நாடுகள் ஒன்றாக இணைந்து தயாரிக்கும் போது தனியான போக்கும் உற்பத்திக்கான திட்டமிடலும் இந்தியாவுக்கு கைகொடுக்குமா என்பது சந்தேகத்துக்குரியது. அமெரிக்காவும், யுரோலாந்தும், சீனாவும் தமது தனித்துவத்தை தக்கவைக்கும் காலத்துக்குள் சென்று கொண்டி ருக்கின்றன. அவை சார்ந்த பொருளாதார அணுகு முறை யொன்று உலகத்தில் எழுச்சி பெற்றுவிடடது. சோவியத் யூனிய[illegible] தகர்ந்ததற்குக்காரணமே அதன் பொருளாதாரக் கொள்கையின் மாறுதல் காலத்தை திட்டமிட்டுப் பயன்படுத்தாமையே யாகும். சீனா இம்மாறுதல் காலத்தை முதலே இனங்கண்டு அமுல்படுத்தியது. அத்துடன், சீனாவின் மூடிய அரசியல் போக்கு அதற்கு மிக அதிக பங்களிப்பை செய்தது.

இது இந்தியாவுக்கு எப்போதுமே இல்லை. இந்தியாவின் அரசியல் திறந்த போக்குடையது. அதனால் பொருளாதார கொள்கைகள் துல்லியமாக வகுக்கப்பட்டு கையாளப்பட வேண்டியது அவசியமாகிறது. எனவே முழு உலகத்தின் சவாலையும் இந்தியா சமாளிக்க வேண்டுமாயின் மாறுதல் கட்டத்தை வேகமாக கடக்க வேண்டும். அது இந்தியாவில் சாத்தியப்படாது. அதனால் காங்கிரஸ் காலம் குழப்பமான கொள்கைக் காலமாகவே அமையப் போகின்றது.

அவ்வாறுதான் வெளிநாட்டுக் கொள்கையும் உலகின் முதல்தர வல்லரசான அமெரிக்காவை நிராகரித்த வெளிநாட்டுக் கொள்கை பிராந்திய சக்திகளை மீளவும் அமெரிக்கா பக்கம் சாய வைக்கும். புதிய அரசு பதவியேற்ற சந்தர்ப்பத்தில், பாகிஸ்தான் வெளிவிவகாரச் செயலாளரும், அமெரிக்க வெளிவிவகார செயலாளருமான (அமைச்சர்) கொலின் பவலும் அமெரிக்காவில் தோன்றி இந்தியா - அமெரிக்க உறவை நிராகரிப்பதற்கு எந்தச் சூழலும் தற்போது எழவில்லை என குறிப்பிட்டார்.

ஆட்சியமைத்த மறுதினமே மீண்டும் பாகிஸ்தான் பொதுநலவாய அமைப்பில் இணைக்கப்பட்டுவிட்டது. இவ்விரு சம்பவங்களும் இந்தியாவின் புதிய ஆட்சிக்கு அமெரிக்கா கொடுத்த எச்சரிக்கையாகும். இதன் அடுத்த கட்டங்கள் படிப்படியாக ஆரம்பிக்க வாய்ப்பு ஏற்படலாம்.

ஜே.என்.டிக்ஷித்தை இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகராக நியமித்ததன் வாயிலாக,



இலங்கை விடயத்தில் இந்திராகாந்தியின் கொள்கையை புதிய அரசு முன்னெடுக்க விரும்புவது என்பது புலனாகிறது. இது முழுமையாக அமெரிக்காவுக்கு எதிரான போக்காகவே அமையவுள்ளது. டிக்ஷித் [illegible] யாவை மீண்டுமொரு பிராந்திய எ[illegible]ன் அரசியலை சாத்தியப்படுத்த முயலாம்.

இலங்கை அரசும் இந்தியாவுடன் அதிக ஒத்துழைப்புக்கு திட்டமிடுமாயின் (ஜே.வி.பி உடனான ஜனாதிபதியின் உறவை பாதுகாக்க) மேலும் இந்தியாவுடனான நெருக்கம் அதிகரிக்கும்.

டிக்ஷித் மாறியிருக்கலாம் எனக் கருத்துக்கள் வெளிவந்தாலும் இந்தியா என்ற பிராந்திய அரசியலுக்குள் பார்க்கும் போது தமிழ் நாட்டுத் தலைவர்கள் கூட அதிகம் சாதிக்க மாட்டார்கள் போலவே உள்ளது. மேலும், புதிய அரசு முன்வைத் திருக்கும் சேது சமுத்திரத் திட்டமும், பிராந்திய நெருக்கமும் ஒன்றுக்கொன்று இலங்கை விடயததில் முரண்ப[illegible] உள்ளது.

ஏனெனில் சேதுசமுத்திரம் சாத்தியப்பட்டால் தென்னிலங்கைத் துறைமுகங்கள் முக்கியமற்றுப்போகும். அது இலங்கை அரசுக்கு தெரியாததொன்றல்ல. அப்படியான இழப்பை தவிர்க்கவே இலங்கை அரசும் அதன் கூட்டாளிகளும் திட்டமிடுவார்கள். அதனாலும், இந்திய - இலங்கை உறவு நெருக்க மடையும் காரணம் ஜே.வி.பி யின் அமெரிக்க எதிர்ப்புவாதமாகும். அதாவது, இந்திய நெருக் கத்தை உடைத்து விட்டு அமெரிக்க கூட்டுடன் சேது சமுத்திரத்திட்டத்தை தடுக்க ஜனாதிபதி சந்திரிகா முயலமுடியாது ஜே.வி.பி உடனான கூட்டு.

எனவே, இந்தியாவின் புதிய அரசு உருவாக்கியுள்ள வெளிநாட்டுக் கொள்கையும், பொருளாதாரக் கொள்கையும் குழப்பகரமான பிராந்திய சூழலை ஏற்படுத்தியுள்ளது. அது சர்வதேசப் போக்கிலும் அந்தக் குழப்பத்தை அதிகப்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் இலஙகைத் தமிழர்கள் தரப்பிலிருந்து தெளிவான முடிவுகளை அழுத்துவது சாதகமான சூழலுக்கு வழிவகுக்கும். பிராந்தியக் குழப்பம் புதிய உறவுகளுக்கு வழிவகுக்கும். ஆனால், அவை அதீதமான தலையீடாகவும் ஆகிவிடும். அதனால், தலையீட்டைத் தவிர்த்து இயல்பான போக்கைப் பாதுகாப்பது சிறப்பான விளைவுகளைத் தரக் கூடியதாக அமையும்.

புதிய அரசின் சீக்கியப் பிரதமர் பொருளாதார விற்பன்னரே அன்றி, அரசியல் அனுபவசாலியோ, ராஜதந்திரியோ அல்ல. சோனியா மறைவிலிருந்து நகர்த்தினாலும் சோனியா காந்தியும் இந்திய அரசியலையோ, பிராந்திய அரசியலையோ சரிவர மதிப்பீடு செய்ய முடியாதவர்.

எனவே அரசியலில் இருவரும் ஆரம்ப வகுப்புக்களையே தாண்டியவர்கள். இதனால் இந்தியா அரசியல் ரீதியில் ஆபத்தான முடிவுகளை எடுக்கும், நிலையை யும் ஏற்படுத்தலாம். அது அமெரிக்கா சார்ந்த மேற்குலகத்திற்கே அதிக இலாபகரமானதாக அமையும். ✦

# யாழ்.பொதுநூலக..........

*8 ஆம் பக்கத் தொடர்ச்சி*

இடையில் 1935 ஆம் ஆண்டு தை மாதம் 1 ஆம் திகதி வாடி வீட்டிற்கு இடமாற்றம் செய்யப்பட்டது. அ.த.துரையப்பா அவர்களின் அதிர்ஷ்டலாச் சீட்டின் மூலம் நிதி திரட்டப்பட்டது. புதிய நூலக கட்டடத்தை அமைக்க அதி.வண.பிதா லோங் அவர்கள் மிகுந்த அக்கறை காட்டினார். வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த யாழ்.நூலகத்தின் சிறப்பான சிற்ப அமைப்புக் கட்டடத்தைக் கட்டுவிக்க தனிநாயகம் அடிகளார், வணக்கத்துக்குரிய லோங் அடிகளார் முதலியோர் முதன்மையாக இருந்ததினால் வண.பிதா லோங் அடிகளாரின் முயற்சியின் மூலம் நூலகத்துறையின் தந்தையான எஸ்.ஆர். ரங்கநாதன் நூலகத்துக்கான திட்டங்களை வகுத்துக் கொடுத்தார். சென்னை அரசின் கட்டடக்கலை நிபுணர் திரு. கே.எஸ். நரசிம்மன் அவர்கள் வரைபடங்களைத் தயாரித்து உதவினார்.

அடிக்கல் நாட்டு வைபவம் 1959 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 29 ஆம் நாள் நடைபெற்றது. திராவிடக் கலையம்சம் பொருந்திய எழில்மிகு அறிவுக்கோயில் ஒன்று வெகு விரைவில் பொது மக்களின் ஆதரவுடன் உருப பெற ஆரம்பித்தது. முதற் கட்டம் பூர்த்தி செய்யப்பட்டு, 1959 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் 11 நாள் அப்போதைய மாநகர முதல்வரால் வெகு விமர்சையாகத் திறந்துவைக்கப்பட்டது. நூலகர் உட்பட 33 பேர் பணியாற்றினார்கள். மொத்தம் 15,910 சதுர அடிகள் கொண்ட பொது நூலகம் கொழும்பு மாநகர சபையின் பழைய நூலகத்தை விட விசாலமானது. யாழ். நூலகம் வடமாநிலத்தில் அனைத்து நூலகங்களினதும் மையமாக விளங்கியது. புதிய மாவட்ட சபையின் கீழ் இயங்கியது. நூலகம் தொடர்பான ஆரம்பகால வரலாறு 1970ஆம் ஆண்டுகளில் க.சி.குலரத்தினம் அவர்களால் ஆவணமாக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ 19 ஆயிரம் வாசகர்கள் காணப்பட்டனர்.

நூலகத்தினுடைய மொத்தத் திரட்டு என்ற அடிப்படையில் பார்க்கும் போது, 97 ஆயிரம் நூல்களுடன் இரவல் வழங்கும் பகுதி, 57 ஆயிரம் நூல்கள் ஐந்தில் ஒரு பகுதி தமிழ் நூல்களுடன் அமெரிக்க நூலகக் கிளையின் பெரும்பாலான நூல்களும் அடங்கியிருந்தன.

அத்துடன், உசாத்துணைப் பரிவு 29 ஆயிரத்து 500 நூல்களையும் கொண்டிருந்தது. நூலகத்திற்கான நூல்கள், நூலகம் கொண்டிருந்த சர்வதேச நூலகவியல் சங்கம் (**World Organisation of Two biranies**) இதனூடு வெளிநாட்டு நூல்கள் கிடைக்கப் பெற்றன. பிரிடடிஷ் கவுன்சிலின் நூலகத்தின் கொழும்புக கிளையில் இருந்து வருடாந்தம் பல நூல்கள் நூலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. இவை மட்டுமன்றி சர்வதேசம் பூராக நூலகத்திற்கு உதவிகளை வழங்கி வந்தன. ஆசிய பவுன்டேசன் (**Asia Foundation**), போரூட் (**FOrut**) நெராட் (**Norud**) போன்றன இவற்றுள் சில வாகும்.

எரியூட்டப்பட்ட யாழ்.பொது நூலகத்தின் பகுதிகளாக -

(அ) நூல் இரவல் வழங்கும் பகுதி.
(ஆ) புதினப் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் கொண்ட வாசகர் சாலை.
(இ) சிறுவர் நூலகம்
(ஈ) உசாத்துணை நூலகம்
(உ) கருத்தரங்குக் கூடம்
(ஊ) கலா பவனம்
(எ) காரியாலயமும், நூல் சேமிப்பு அறையும், முற்றாக எரிந்து விழுந்தன.

இதனைக் கண்டித்து நாடாளுமன்றத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் அமிர்தலிங்கம் ஆற்றிய உரை வருமாறு.

"இரண்டாம் உலக யுத்தத்தின் போது பிரித்தானியா மீது குண்டுவீசச்சென்ற தனது விமானிகளுக்கு ஓக்ஸ்ட்போட் (**Oxford**) பல்கலைக்கழகம் மீது குண்டுவீசி அழிக்கக் கூடாது என கிட்லர் கட்டளையிட்டார். அதேபோல், ஜேர்மனியின் நைடல் போர்க் பல்கலைக்கழகத்தைத் தவிர்க்கும் படி பிரித்தானியா தனது விமானப்படைக்கு பணிப்புரை வழங்கியது. அறிவுறுத்தல்களை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் பகைவர்களுக்கு இருந்தது என்றார்." இது எவ்வாறாயினும் தற்போது தற்காலிகமாக திறக்கப்பட்டிருக்கும் நூலகம் நிரந்தரமாக அதன் படுகொலை நிகழ்ந்து 23 ஆம் ஆண்டு நிறைவு விழாவிலாவது இடம்பெறுமா?

## சேர்த்து வாசிக்கவும்

நேமியெங்கும் நேசக்கரம் நீட்டி
காத்தருளும் கண்ணகை.

என்ற தலைப்பில் நேற்றைய தினம் வெளியான கட்டுரை யின் ஆசிரியர் பெயர் தவறுதலாக விடுபட்டுள்ளது. கட்டுரை ஆசிரியர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் என்பதனை சேர்த்து வாசிக்கு மாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தவறுக்கு வருந்துகிறோம்.

# தலிபானுக்கு ஆதரவான மதத்தலைவர் பாகிஸ்தானில் சுட்டுக்கொல்லப்பட்டார்!



(இஸ்லாமாபாத்)

தலிபானுக்கு ஆதரவான சுனி முஸ்லிம் மதத் தலைவரான முப்தி நிசாமுதீன் சம்சாய் என்பவர் பாகிஸ்தானில் நேற்றுமுன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டார்.

தனது வாகனத்தில் பாடசாலைக்கு சென்றுகொண்டிருந்தவேளையிலேயே இவர் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தையடுத்து நேற்று பாகிஸ்தான் கராச்சியில் வன்செயல்கள் நிகழ்ந்தன. அங்கு வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன. வீதிகளில் வாகனங்கள் செல்லமுடியாத நிலையில் அவ்விடங்களிலேயே நிறுத்தப்பட்டன.

இதனையடுத்து பாகிஸ்தான் படையினர் கடுமையான பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். பொலிஸார் ஷியாப் பிரிவின் பள்ளிவாசல்களுக்கு பலத்த பாதுகாப்பினை வழங்கியுள்ளனர்.

இதேவேளை ஆறு அடிப்படை மனித உரிமை அமைப்புக்களை உள்ளடக்கிய முத்தாகிதா மஜிலிஸ்ஜப் - இ - அமல் என்ற அமைப்பு, வரும் வெள்ளிக்கிழமை இந்தக் கொலையைக் கண்டித்து நாடுதழுவிய எதிர்ப்பினை வெளிப்படுத்துவதற்கு அழைப்பு விடுத்துள்ளது.

இந்த அமைப்பின் சிரேஷ்ட தலைவர் மௌலானா ரஃமான் தெரிவிக்கையில் - இந்தக்கொலை தொடர்பாக நாங்கள் வாய்மூடி மௌனிகளாக இருக்கமாட்டோம். நாங்கள் இந்த மனிதநேயமற்ற படுகொலைக்கு எதிராக எமது கடுமையான எதிர்ப்பைத் தெரிவிப்போம்.

இந்தக்கொலை தொடர்பான சூத்திரதாரிகள் கைதுசெய்யப்படாவிட்டால் நாங்கள் மாற்றுவழியை எடுப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படுவோம் எனத் தெரிவித்தார்.

இந்தக்கொலை தொடர்பான விசாரணைகள் தம்மால் நடத்தப்படுவதாக பாகிஸ்தான் பொலிஸார் தெரிவித்தனர். ஆனால், சூத்திரதாரிகள் எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை.

மதத்தலைவர்சென்ற கார்மீது ஆறு துப்பாகிதாரிகள் தாக்குதலை நடத்தியதாக சம்பவத்தை நேரில கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்த தாக்குதலில் மதத்தலைவரின் மகன், உயிரிழந்தவரின் உறவினர், கார்ச்சாரதி, பொலிஸார் ஒருவரும் காயமடைந்தனர்.

கடந்த 15 வருடங்களில் சுனி - ஷியா இன முஸ்லிம்களிடையே இடம்பெற்ற வன்செயல்களில் ஆயிரக்கணக்கானவர்கள் பாகிஸ்தானில் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மனைவியை தாக்கியவருக்கு 6 மாத சிறை, 300 கசையடி தீர்ப்பு

(றியாட்)



மனைவியைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டின்பேரில் கணவனுக்கு சவுதி நீதிமன்றமொன்று ஆறுமாத சிறைத்தண்டனையும், 300 கசையடியும் வழங்கித் தீர்ப்பளித்துள்ளதாக சவுதியின் செய்தி நாளிதழ் தெரிவித்தது.

தாக்கப்பட்ட மனைவி சவுதியிலுள்ள தொலைக்காட்சி நிறுவனமொன்றின் தலைவியாக உள்ளார்.

கணவருக்கு மேற்குறித்த தண்டனை காணாதென மனைவியின் சட்டத்தரணி தெரிவித்தார்.

தாக்கப்பட்ட மனைவியின் முதுகில் 13 எலும்பு முறிவுகள் எற்பட்டுள்ளன. இந்த எலும்பு முறிவுகளை படமெடுத்து தான் வெளியிடவுள்ளதாகவும், 'இதன்மூலம் சவுதியில் என்ன நடைபெறுகின்றது எதன்பதனை அந்தநாட்டு பெண்கள் அறியவேண்டுமெனவும் பாதிக்கப்பட்ட மனைவி தெரிவித்தார்.

மயக்கம் எற்படும்வரை தன்மீது தாக்குதல் நடத்திய கணவன் அதன பின் தனது முகத்தின்மீது க்டுமையாகத் தாக்கியதாக மனைவி தெரிவித்தார்.

இவர் இந்தப் படுகாயங்களிலிருந்து உயிர்தப்பியது மிகப்பெரிய அதிர்ஷ்டம் என வைத்தியர்கள் தெரிவித்தனர்.




# சவுதியில் பணயக் கைதிகளாக அல்கொய்டா அமைப்பினரால் பிடிக்கப்பட்ட பத்து இந்தியர்கள் சுட்டுக்கொலை!

(றியாட்)

அல் - கோபார் நகரில் எண்ணெய் நிறுவனமொன்றில் நடத்திய தாக்குதலில் தாம் 10 இந்தியர்களைச் சுட்டுக்கொன்றதாக அல் - கொய்டா அமைப்பு அறிவிததுள்ளது.

இது தொடர்பாக அல் - கொய்டா தீவிரவாதிகளின் இணையத்தளம் ஒன்றில் வெளியிடப்பட்ட செய்தியில் கூறியிருப்பதாவது -

சவுதி அரேபியாவைத் தூய்மைப்படுத்தவும், மேற்கத்திய நாடுகளின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கவும் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கின்றோம். இதில் 10 இந்தியர்களையும் சுட்டுக்கொன்றுவிட்டோம். காஷ்மீர் விடுதலைக்காகப் போராடிய எங்கள் சகோதரர்களை ராணுவத்தினர் சுட்டுக்கொன்றதற்குப் பழிக்குப்பழி வாங்க இந்தியர்களைச் சுட்டுக்கொன்றோம். எங்கள் புனிதப் போராட்டத்தில் நிமர்பின சுஜாஹ் அல்பாக்மி என்ற தியாகி மரணம் அடைந்தார்.

இவ்வாறு அந்தச் செய்தியில் அல் - கொய்டா தீவிரவாதிகள் கூறியுள்ளனர். சவுதியில் அல் - கொய்டா இயக்கத்தலைவர் அப்துல் அஜீஸ் இதில் கையெழுத்திட்டிருக்கிறார்.

சவுதியில் ஏற்கனவே கடந்த 1 ஆம் திகதி நடந்த தாக்குதலில் அமெரிக்கர் ஒருவர் பலியானார். இப்போது நடந்த தாக்குதலில் 2 அமெரிக்கர்கள் பலியானார்கள்.

# சூடான் கறுப்பின மக்களுக்கு மனிதாபிமான உதவிப் பணிகளை உடனடியாக வழங்கக் கோரிக்கை



சூடானின் கிழக்குப் பகுதியில் உள்ள அகதிகளுக்கு அவசர மனிதாபிமான உதவிகளை உடனடியாக வழங்குவதற்கு சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென உதவி நிறுவனங்கள் அழைப்பு [illegible]ள்ளன.

[illegible] மில்லியன் கணக்கான கறுப்பினத்தவர்கள் சூடானின் மேல் மாகாணமான டர்பூர் பிரதேசத்திலிருந்து அராபிய ஆயுததாரிகளால் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

சுமார் ஒரு லட்சத்து 80,000 கறுப்பின மக்கள் அருகிலிருந்த மாகாணமான ஷாட் பகுதியினுள் சென்று அடைக்கலம் தேடியுள்ளனர்.

இந்த அகதிகளுக்கான உதவிகள் குறித்து சர்வதேச நாடுகளிடம் அழைப்பு விடுக்கப்பட்டபோதும், அவை இதனை சரியான முறையில் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனையிட்டு தாம் அதிருப்தி அடைவதாக ஐ.நாவின் அகதிகளுக்கான அமைப்பு தெரிவித்தது.

மழைகாலம் நெருங்கிவருவதால் இந்த மக்களுக்கான உதவிகளை வருங்காலத்தில் செய்வது மிகவும் கடினமாக இருக்குமெனவும் அந்த அமைப்பு தெரிவித்தது.

சூடானின் கிழக்குப் பகுதியான ஷாட்டில் தற்போது மனித அவலங்கள் நிகழ்வதாக அங்குள்ள நிலைமைகளை ஐ.நாஅமைப்பு வர்ணித்துள்ளது.

மேற்குப் பகுதியான டர்பூரில் ஆயிரக்கணக்கான கறுப்பினத்தவர்கள் அராபிய ஆயுதக் குழுக்களினால் கொல்லப்பட்டுள்ளதாகவும், பல கறுப்பின பெண்கள் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் கொள்ளைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனாலேயே அப்பகுதியிலுள்ள மக்கள் அருகிலுள்ள ஷாட்டிற்குள் அடைக்கலம் புகுந்துள்ளனர்.

இதேவேளை இந்தப் பிராந்தியம் சர்வதேச நாடுகளுக்கு ஒரு முக்கியமில்லாததாக உள்ளபடியால் அவற்றின் உதவிகள் பெருமளவில் வழங்கப்படவில்லையென யு.என்.எச்.சி.ஆரின் பிரதிநிதியான லினோ போடின் தெரிவித்தார்.

# இஸ்ரேலிய ஏவுகணைத் தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் முக்கியஸ்தர் பலி!

காஸா நகரில் இஸ்ரேலிய ஹெலிகொப்ரர் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் உள்ளூர் ஹமாஸ் தளபதி ஒருவர் உட்பட மூன்று பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

செய்ரோன் மாவட்டத்திலுள்ள நகரவீதியொன்றில் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றின் மீதே இஸ்ரேலிய ஹெலிகொப்ரர் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியது.

நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலை அடுத்து சில நிமிடங்களில் மீண்டும் ஒரு ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதல்களில் மூன்று பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாகவும் ஏழுபேர் காயம் அடைந்ததாகவும் பலஸ்தீன மருத்துவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

மசூதியில் ஒலிபெருக்கிமூலம் விடுக்கப்பட்ட அறிவித்தலில் உயிரிழந்தவர்களில் இருவர் ஹமாஸ் அங்கத்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து இஸ்ரேல் எந்தக் கருத்தையும் வெளியிடாதபோதிலும், நசார் இஸ்ரேலிய இராணுவத்தில் கொல்லப்படவேண்டியவர்களின் பட்டியலில் முக்கியமானவராக இருந்தவர் என்று பி.பி.சியின் செய்தியாளர் தெரிவித்தார்.

இந்தக்கொலை ஏற்கனவே இரண்டுமுறை முயற்சிகள் எடுக்கப்பட்டு அவை தோல்வியில் முடிந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

தாக்குதலில் உயிரிழந்த நசாரின் குடும்பம் பலஸ்தீன போராட்டத்தில் அதிக உயிர்விலைகளைக் கொடுத்ததெனவும், இவரது குடும்பத்தைச்சேர்ந்த ஒரு டசினுக்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது. கடந்த வருடம் நசாரின் வீட்டில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்றில் சகோதரர் உட்பட 3 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஈராக்கில் இடைக்கால அரசு; அமைப்பது குறித்த இறுதிக்கூட்டம் ஆளுநர் சபையால் ஒத்திவைப்பு!

(பாக்தாத்)

ஈராக்கில் இடைக்கால அரசாங்கம் ஒன்றினை அமைப்பது தொடர்பாக இறுதிமுடிவினை எடுப்பதற்காக நடாத்தப்படவிருந்த ஈராக்கிய ஆளுநர் சபையின் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் ஆட்சிப் பொறுப்பை ஏற்கவிருக்கும் இடைக்[illegible]ல அரசாங்கத்தின் பெரும்பா[illegible]ன பதவிகளுக்கானவர்கள் [illegible]ரிவுசெய்யப்பட்டுள்ளபோதும், இடைக்கால அரசின் தலைவர் யாரென்பது இதுவரையில் தீர்மானிககப்படவில்லை.

புதிதாக பதவியேற்கவுள்ள ஈராக்கிய இடைக்கால அரசின் தலைவரை தேர்ந்தெடுப்பது தொடர்பாக கருத்து வேறுபாடுகள் நிலவி வருகின்றது.

ஈராக்கில் தமது அதிகாரத்தை நிலை நிறுத்துவதற்காகவே அமெரிக்கா இடைக்கால அரசினை அமைப்பது தொடர்பாக தாமதம் காட்டிவருவதாக ஈராக்கிய ஆளுநர்சபை உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஈராக்கில் இடைக்கால அரசு ஒன்றினை அமைப்பதற்கு காலம் தாழ்த்துவதன் காரணம், அவ் இடைக்கால அரசிற்கு யாரைத் தலைவராக நியமிப்பது என்பதில் அமெரிக்காவிற்கும், ஈராக்கிய ஆளுநர் சபைக்கும் இடையில் தோன்றியிருக்கும் கருத்து வேறுபாடே காரணம் என பி.பி.ஸியின் நிருபர் ஹைல்லி தெரிவித்தார்.

தற்போது ஆளுநர் சபையின் தலைவராக உள்ள பிரபல வர்த்தகரும், சுனி முஸ்லிம் குழுத் தலைவருமான ஹாசி யாவர் இடைக்கால நிர்வாக அரசின் தலைவராக வருவதையே ஈராக்கிய ஆளுநர் சபை உறுப்பினர்கள் விரும்புகின்றனர்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஈராக்கிய ஆளுநர்சபை உறுப்பினர் முகமட் ஏத்மன், இது ஈராக்கியர் சம்பந்தமான ஒரு விவகாரம் ஆகையால் ஈராக்கியர்கள் இதுபற்றித் தீர்மானிக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.



ஆனால் முன்னாள் வெளிநாட்டு விவகார அமைச்சர் அட்னன் பச்சாச்சியிலே, ஈராக்கிய இடைக்கால அரசின் தலைவராக வருவதையே அமெரிக்காவும் ஐக்கிய நாடுகள் சபையும் விரும்புகின்றன.

# பணயக் கைதிகளாகப் பிடித்துவைத்திருந்த இஸ்லாமிய தீவிரவாதிகளைப் பிடிக்க சவுதிப் படையினர் தேடுதல் வேட்டை!

சவுதியில் பணயக்கைதிகளாகப் பிடிக்கப்பட்டிருந்த தொழிலாளர்கள் அந்நாட்டு படையினரால் மீட்கப்பட்டடதைத்தொடர்ந்து இஸ்லாமியத் தீவிரவாதிகள் தப்பியுள்ளதாகவும், அவர்களைத்தேடி சவுதிப்படையினர் தேடுதலை நடத்துவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முக்கிய சந்திகளில் பொலிஸாரின் சோதனைச் சாவடிகள் அமைக்கப்படடு மூன்று இஸ்லாமியத் தீவிரவாத அமைப்பின் உறுப்பினர்களைத் தேடும்பணி தொடர்கின்றது.

பணயக் கைதிகளைப் பிடித்த குழுவின் தலைவர் காயமடைந்ததுடன் கைதுசெய்யப்பட்டதாகவும், மற்றவர்கள் பணயக்கைதிகளை மனிதக் கேடயங்களாகப் பிடித்துக்கொண்டு தப்பிவிட்டதாகவும் சவுதி அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதைப்போன்ற மேலும் பல தாக்குதல்கள் நடைபெற வாய்புக்கள் இருப்பதாக அமெரிக்காவிற்கான சவுதித் தூதுவர் தெரிவித்தார். இருந்தபோதிலும், இவ்வாறான தாக்குதல் நடைபெறுவதற்கான புலனாய்வுத் தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லையெனவும் தெரிவித்தார்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# துறைமுக கடற்பகுதியில் தமிழ் இளைஞர் கைது!

## திருமலையில் சம்பவம்

திருகோணமலை றொக்கி பொயின்ற் பகுதியிலுள்ள தடை செய்யப்பட்ட கடற்பகுதியில் வைத்து - அப்பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்படையினரால் ஒருவர் கைதுசெய்யப்பட்டதுடன், அவரது படகும் கடற்படையினரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக படைத் தலைமையகம் தெரிவித்தது.

மூன்று பொதுமக்கள் படகினுள் இருந்ததாகவும், கடற்படையினர் அவர்களை நெருங்கிச் சென்ற வேளை மூவரும் கடலினுள் பாய்ந்து நீந்தியதாகவும் இவர்களில் ஒருவரை கடற்படையினர் கைதுசெய்துள்ளதாகவும் படைத்தரப்பு மேலும் தெரிவித்தது.

கைதுசெய்யப்பட்டவர் திருகோணமலையைச் சேர்ந்த எஸ்.சிவராசா எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்பாசியை தாம் சேகரித்துக் கொண்டிருந்த வேளையிலேயே கடற்படையினர் தன்னைக் கைதுசெய்துள்ளதாக சிவராசா கடற்படையினரின் விசாரணைகளில் தெரிவித்தார்.

படகிலிருந்து ஜி.பி.எஸ் கருவியோடும் சாதனங்கள் நான்கு, ரோச் 01, பற்றறி 01, றெகுலேற்றர் என்பனவும் படகும் திருகோணமலை துறைமுகத்திலுள்ள பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் படைத் தலைமையகம் தெரிவித்தது.

# யாழ்.இளைஞன் கொழும்பில் கைது!

கொழும்பு கோட்டைப் பகுதியில் கடந்த புதன்கிழமை சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய யாழ்ப்பாண இளைஞர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் செரத் விருது வழங்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள சிலோன் இன்ர கொன்டினென்ரல் ஹொட்டலில் நடைபெற்றது.

அவ்வேளையில் இந்த ஹொட்டலுக்கு அருகில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய இளைஞரே பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டவராவார்.

பொலிஸாரின் விசாரணைகள் மூலம் இவரது பெயர் ஜெபநேசன் எனவும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் எனவும் தெரிவித்த பொலிஸார் இவர் விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவரெனவும் குறிப்பிட்டனர்.

இவர் தொடர்பாக மேலதிகமாக விசாரணை நடத்தியபோது கடந்த மார்ச் மாதம் கொழும்பு பண்டார நாயக்க மாநாட்டு மண்டபத்தில் தற்போதைய வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வருகைதந்த வேளை அனுமதிப்பத்திரமில்லாமல் மண்டபத்தினுள் பிரவேசித்த நபரென தெரியவந்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா மற்றும் அமைச்சர் கதிர்காமரின் பின்னால் புலிகளின் புலனாய்வுப் பிரிவு செயற்பட்டுவருவதாகவும் இது மிகப்பெரிய பாரதூரமான விடயமெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்படுபவர்கள் புலிகள் அமைப்பின் சந்தேகநபர்களாக இருந்தாலும் 24 மணி நேரத்தினுள் அவர்கள் மீதான விசாரணையை நடத்தி நீதிமன்றில் ஆஜர்படுத்த வேண்டும்

இதனால் பொலிஸாரின் பயங்கரவாத ஒழிப்பு பிரிவினர் பாரதூரமான சிக்கல்களை எதிர்நோக்குவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# நெருக்கடி நிலை குறித்து ஜனாதிபதி - ஜே.வி.பி சந்திப்பு

ஜே.வி.பிக்கும் - சுதந்திரக் கட்சிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை நீக்குவது குறித்து ஜே.வி.பி - நேற்று ஜனாதிபதியை சந்தித்து பேசியுள்ளது.

நேற்று மாலை 6 மணிக்கு ஆரம்பமான இந்தச் சந்திப்பு சுமார் மூன்று மணித்தியாலத்திற்கு மேல் நீடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சந்திப்பில் விமல் வீரவன்ச, ரில்வின் சில்வா, சோமவன்ச அமரசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன் போது ஜே.வி.பி நேற்று ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் குறித்து இந்தப் பேச்சில் ஆராயப்பட்டதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. அரசு முன்னெடுத்துவரும் சமாதான முயற்சிகள் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என ஜே.வி.பியினர் தெரிவித்தனர்.

(01)

# ஊடகவியலாளர் நடேசன்...

தையடுத்து மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் ஸ்தலத்துக்கு விரைந்து சடலத்தைப் பார்வையிட்டதுடன் - அதைப் பிரேத பரிசோதனைக்காக மட்டு - போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கவும் உத்தரவிட்டார்.

மட்டக்களப்பு வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைகளின் பின்னர் - பத்திரிகையாளர் நடேசனின் சடலம் நேற்று மாலை உறவினரிடம் கையளிக்கப்பட்டது.

இந்தப் படுகொலைச் சம்பவத்தையடுத்து மட்டக்களப்பு நகரில் பெரும் பதற்றமும், மக்கள் மத்தியில் பீதியும் ஏற்பட்டுள்ளது. இதனால் பொலிஸாரின் விசாரணைகளுக்கு பொதுமக்களிடம் இருந்து ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ஜி.நடேசன் வீரகேசரி, ஐ.பி.சி. வானொலி, உள்ளிட்ட அச்சு இலத்திரனியல் ஊடகங்களுக்கு மட்டக்களப்பு செய்தியாளராக பணியாற்றி வந்தவராவார்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான நடேசன், நெல்லியடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

வீரகேசரி வார இதழில் கருணாவின் நடவடிக்கைகள், படுகொலைகள் குறித்து இவர் கட்டுரைகளை எழுதியிருந்ததுடன், இதுதொடர்பான பல்வேறு சந்தேகங்களையும் எழுதியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவரது படுகொலைகள் குறித்து உள்ளூர், வெளியூர் ஊடகத்துறை அமைப்புக்கள் கடும் கண்டனங்களை வெளியிட்டுள்ளன.

சுட்டுக்கொல்லப்பட்ட ஊடகவியலாளர் நடேசனின் சடலம் இன்று அவரது சொந்த இடமான நெல்லியடிக்குக் கொண்டுவரப்பட்டு நாளை இறுதிக்கிரியைகள் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

# வட இலங்கை பத்திரிகையாளர் சங்க[ம்] நடேசன் கொலைக்குக் கண்டனம்!

(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர் நடேசனின் படுகொலை தமிழ் ஊடகவியலாளர்கள் மத்தியில் அதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியிருப்பதாக - வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம் வெளியிட்ட கண்டன அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் ஊடகவியலாளர் ஜி.நடேசனின் படுகொலை தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

அன்று வடக்கில் எமது செயலாளர் நிமலராஜனை இழந்தோம். இன்று கிழக்கில் ஊடகவியலாளர்களுக்கும், தமிழினத்துக்கும் நல்லொளி வீசிய கதிரவன் அஸ்தமித்துவிட்டான்.

உண்மைக்கும், நேர்மைக்கும், நடுநிலைமைக்கும், அஞ்சாமைக்கும் படுகுழி பறிக்கப்பட்டுவிட்டது. பத்திரிகை சுதந்திரத்திற்கு சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டது.

அன்று நிமலராஜன் இன்று நடேசன், நாளை யாரோ என்ற திகிலில் பத்திரிகையாளர்கள் தி[...] நிற்கின்றனர்.

இந்த ஈனச்செயலை [...] இலங்கை பத்திரிகையாளர் [...] வன்மையாகக் கண்டிப்பதோ[...]

பத்திரிகையாளர்களின் [...] காப்புக்கு அரசாங்கம் உத்தர[...] அளிக்க வேண்டும் என கோரு[...]றது.

இவ்வாறு வட இலங்கை[ப் பத்]திரிகையாளர் சங்கம் வெளி[...] கண்டன அறிக்கையில் தெரிவி[க்கப்]படுகிறது.

# வலயக்கல்விப் பணிப்பாளர்களுட[ன்] உலக வங்கி அதிகாரிகள் பேச்சு

## பாடசாலை நிலைமைகள் குறித்து ஆராய்[வு]

(யாழ்பாணம்)

உலக வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழுவொன்று யாழ்.மாவட்டத்திலுள்ள ஐந்து வலயங்களையும் சேர்ந்த கல்விப் பணிப்பாளர்களை சந்தித்து கலந்துரையாடல் நடத்தியுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் நேற்றையதினம் யாழ். கல்வி வலயத்தில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் காலை 10.00 மணிக்கு நடைபெற்றது.

உலக வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி பீற்றர் ஹரோல்ட், உலக வங்கியின் இலங்கைக்கான ஆலோசகர் ரவீவ் றொபின்சன் ஆகியோர் தலைமையிலான குழுவே தீவகம், வடமராட்சி, தென்மராட்சி, யாழ்ப்பாணம், வலிகாமம் வலயங்களை சேர்ந்த கல்விப் பணிப்பாளர்களைச் சந்தித்து கலந்துரையாடியது.

இந்த கலந்துரையாடலின் போது, யாழ். மாவட்டத்தில் உள்ள [...] சாலைகளின் எதிர்கால அபிவி[ருத்தி] நடவடிக்கை தொடர்பாகவும், [...]வித் தரத்தினை முன்னேற்று[வதற்]கான திட்டங்கள் தொடர்பா[க...] பாடசாலைகளில் உள்ள [...] சுகாதார வசதிகள் தொடர்பா[க...] இன்றைய காலகட்டத்தில் [...] சாலைகள் எதிர்நோக்கும் பிர[ச்சினை]கள் தொடர்பாகவும் வி[...] ஆராய்ந்தனர்.

# நாட்டுப்பற்றாளர் நடேசன்...

எதிர் காலத்தை இணைத்து தமிழ் சமூகம் சுதாகரித்துக்கொள்வதற்கான அறிவுறுத்தலையும் சுட்டிக்காட்டுதல்களையும், மேற்கொண்டு ஊடகவியலாளனுக்குரிய சிறந்த பண்பினை கொண்டவர். யுத்த, சமாதான காலத்தில் இன்னல்களை அனுபவித்த தமிழ் மக்களின் வாழ்வியல் துன்பங்களை விடுதலையுடன் கூடிய இயல்பு வாழ்கைக்காக மக்கள் கொண்ட ஏக்கங்களை உள்ளூரிலும், உலக நாடுகளிலும் வெளிக்கொண்டுவந்ததன் மூலம் சர்வதே சமூகத்தின் நம்பிக்கைக் குரலாக விளங்கியவர்.

தமிழ்த் தேசிய தலைமையின் கீழ் மிகுந்த மதிப்பும், பற்றுறுதியும் நம்பிக்கையையும் பெற்றவர் அந்த தலைமையின் நம்பிக்கைகுரிய தகமைகளை மக்கள் மத்தியில் வெளிப்படுத்தி தமிழ்த் தேசியதலைமையின் கீழ் மக்கள் அணிதிரள வேண்டிய வரலாற்று அவசியத்தை மக்களுக்கு உணர்த்தியவர்.

உண்மை நியாயம் என்பவற்றின் பக்கமாக நிலையெடுத்து நின்றவர். ஆபத்துக்களை எதிர்நோக்கிய போதும் தனது நிலையில் இருந்து சிறிதும் மாறுபடாது வரலாற்றில் தான் வரித்த பாத்திரத்தை முழுமைப்படுத் தியவர்.

கல்விமான்கள், ஊடகவியலாளர்கள் தமிழ்மக்களின் நேசசக்திகள் கொல்லப்படுவது கொடுஞ்செயலாகும். சமாதானம் நிலவிவரும் இக்காலத்திலும் இத்தகைய கொலை நடவடிக்கைகள் மூலம் சமாதானத்திற்கெதிரான சக்திகள் தமது அடாவடித்தனங்களை மேற்கொண்டுவருகிறார்கள். இந்த நடவடிக்கையானது இத்தீவில் வாழும் மக்களை மீண்டும் இன்னலுக்குள் உள்ளாக்கும் வரலாற்றுக் காலத்துக்கே இட்டுச்செல்லும்.

எனவே, இந்த நிலையை கருத்தில் எடுத்து அரச படைகளும் அப்படைகளுடன் இணைந்து செயற்படுபவர்களும் இக்கொலைகளை நிறுத்திக்கொள்வதே இக்காலத்தின் கட்டாயமாகும்.

மூத்த ஊடகவியலாளர் ஜி.நடேசன் அவர்களின் இழப்பினால் தாழாது துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எவ்வளவு தாக்கத்தையும், [...]தையும் ஏற்படுத்தியதோ அ[...]வுக்கு பத்திரிகை உலகிற்கு[...]கும் எமது தேசத்தின் வர[...]கும் ஏற்படுத்தியிருக்கின்ற[...]

யுத்த சமாதான கால[...] இன்னல்கள் அனுபவித்த [...] மக்களின் வாழ்வியல் துன்ப[...] விடுதலையுடன் கூடிய இயல்[...] கைகளை மக்கள் கொண்[...] களை உள்ளூரிலும் உல[...] லும் வெளிக்கொண்டு தம[...] யத்தின் எழுச்சிக்கும் அத[...] கட்டுமான வளர்ச்சிக்கும் ப[...] றிய அமரர் ஜி.நடேசன் [...] ளுக்கு தமிழீழ விடுதலைப் [...] "நாட்டுப்பற்றாளர்" என்னும் நி[...] வழங்கிக் கௌரவித்துள்ள[...] தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புளத் சிங்கள...

மதிக்கப்பட்டவேளை சிங்கள காடையர்கள் அவர்களைத் தாக்கியுள்ளனர். தாக்கப்பட்டு காயமடைந்தவர்கள் களுத்துறை வைத்திய சாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இவர்களுக்கு வைத்திய சாலையில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் நடைபெற்றதையடுத்து இந்தப் பகுதி தமிழ் - சிங்கள மக்களிடையே மேலும் முறுகல் நிலை ஏற்படலாம் என்ற அச்சம் காணப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கின்றார்.

நேற்று மாலை ஏற்பட்ட இந்தச் சம்பவத்தையடுத்து களுத்துறை பகுதியின் பல்வேறு இடங்களில் பதற்றம் நிலவியது. இந்தப் பகுதியில் பெருமளவு இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

ஏற்கனவே கந்தப்பொல, பிங்கிரிய போன்ற இடங்களிலும் இவ்வாறு தமிழ்மக்களுக்கு எதிரான தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்ற வேளை நான்கு தமிழர்கள் கொல்லப்பட்டிருந்தமை என்பது குறிப்பிடத்தக்கது.

# சமாதான முயற்சிக்கு[...]

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையில் இந்தியாவின் பங்களிப்பு போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இவர்கள் இருவரினது விஜயத்தின் முன்னோடியாகவே வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியாவில் தங்கியிருந்து அரசியல் தலைவர்களுடன் [...]ளில் ஈடுபட்டுள்ளார் எனவு[ம் தெரிய] வருகிறது.

இந்தியாவுக்கு செ[...] வெளிவிவகார அமைச்சர் [...] கதிர்காமர் நாடு திரும்பிய[...]


இவர்களது இந்த [...] ஆரம்பிக்கப்படும் எனவு[ம்...] விஜயங்கள் ஒன்றன்பின் [...] இருக்குமெனவும் தெரிவி[க்கப்படு]கிறது.

Reporters Publications Limi[ted]
Company யினரால் வெளியிடப்படு[ம்]
இலங்கை விகட[ன்]
வாரப் பத்திரிகைக்கு
1. பக்க வடிவமைப்பாளர்கள்
2. பத்திரிகையாளர்கள்
மற்றும் எழுத்தாளர்க[ள்]
பகுதி நேரம்/முழுநேரம் வேலை செய்வ[...]
யாழ், திருமலை, கொழும்பு அலுவலகங்[...]
வேலை செய்வதற்கு தேவைப்படுகிறார்க[ள்]
ஆர்வமுள்ளோர் ஏழு(7) நாட்களுக்குள் விண்ணப்பி[...]
விண்ணப்பிக்க வேண்டிய மு[கவரி]
ஆளணி முகாமையாளர்,
66/3 பழம் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
தொ.பே : 0777-917110.

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01.06.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிட[ப்பட்டது]

# கணினி தொழில்நுட்ப கற்கைநெறி நுழைவாயில்...

தகவல் தொழிநுட்ப அறிவானது இன்றைய உலகில் அனைவருக்கும் பொதுவானதும் அத்தியாவசியமானதுமாகக்




கருதப்பட்டு வரும் இன்றைய நிலையில் போரினால் பாதிக்கப்பட்டிருப்போர் என்ற காரணங்களைக்காட்டி நாம் ஒதுங்கிவிட முடியாது. உருவாகிவரும் அறிவுசார்ந்த சமூகங்களினை எதிர்கொள்ளத்தக்க வகையில் நாமும் எம்மைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.

இந்த நிலையில் தகவல் தொழில் நுட்பத்திலே பயிற்சிகளை வழங்கிவரும் நிறுவனங்களின் பங்களிப்பினை நாம் மறந்துவிட முடியாது. யாழ்.மாவட்டத்தைப் பொறுத்த வரையில் போரின் கோரப்பிடியில் இருந்த சூழ்நிலையிலும் கூட இத்தகவல் தொழிநுட்பக்கல்வியினைச் சிறந்த முறையில் வழங்கி இலங்கையின் மற்றைய பிரதேசங்களுடன் ஒப்பிட்டுத் தொழில்நுட்பச் சமநிலையைப் பேணிவந்ததை நாம் குறிப்பிட்டுக் கூறவேண்டும்.


யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தற்பொழுது தகவல் தொழிநுட்பக் கல்வியைக் கற்பதற்கு ஏற்ற ஒரு சிறந்த சூழல் காணப்படுவதாகவே நாம் கருதுகிறோம். காரணம் கடந்த மூன்று, நான்கு வருடங்களிற்கு முன் அடிப்படைக் கணினிக்கற்கை நெறிகளையே வழங்கி வந்த இந்த நிறுவனங்கள் தற்பொழுது சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்ற பல கற்கை நெறிகளினை அறிமுகப்படுத்தி இருப்பதனால் கல்வியின் தரமானது உயர் தொழில்சார் மற்றும் மூன்றாம் நிலைக்கல்வித் தரத்தினை எட்டியுள்ளதையிட்டு நாம் அனைவரும் மகிழ்ச்சியடையவேண்டும்.

எமது மாணவர்கள் தமது பெற்றோரின் பெருந்தொகையான பணத்தினைச் செலவு செய்து பல இடர்பாடுகளிற்கு மத்தியிலும் தென்பகுதி சென்று உயர்நிலைக் கணினிக்கற்கை நெறிகளைக் கற்றுவந்த நிலை மாற்றமடைந்து அதே தரத்தினையுடைய உயர் மற்றும் பட்டக்கல்வியினைத் தற்பொழுது தமது பெற்றோருடன் இருந்து தமது சொந்த மண்ணிலேயே மிகக் குறைந்த செலவில் மேற்கொள்ளக் கூடிய வசதிகள் உருவாக்கப்பட்டிருப்பது இந்த சமூகத்தின்



வளர்ச்சிக்குக் கிடைத்த ஓர் முதல் வெற்றியாகவே கருதுகிறோம்.

எமது பிரதேசத்தில் இயங்குகின்ற நிறுவனங்கள் தமது பொறுப்பினை உணர்ந்து மேலும் - எமது தமிழ்ச் சமூகத்திற்கு ஓர் சிறந்த சேவையினை வழங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம். உங்களை நம்பி வருகின்ற மாணவர்களை சிறந்த முறையில் வழிப்படுத்த வேண்டிய பொறுப்பினைப் பெற்றோர்கள் உங்களிடமே ஒப்படைக்கின்றனர். இந்தக் கடமைப்பாட்டினை உணர்ந்து உங்கள் செயற்பாடுகள் அமைய வேண்டும் என்பதே இந்தச் சமூகத்தின் ஆவல் ஆகும்.



நிறுவனங்களிற்கிடையிலான போட்டியால் கட்டணங்களைக் குறைப்பதால், நிறுவனங்கள் தமது தரத்தினைப் பேணத் தவறுகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு ஓர் நியாயமான கட்டணத்தினைத் தீர்மானித்து நம்பகரத் தன்மையான சேவையினை வழங்குமாறு எங்கள் சமூகம் உங்களைக் கேட்டுக் கொள்கின்றது.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்விக்காக நிறுவனங்களைத் தெரிவு செய்கின்ற போது மிகக் கூடுதலான கவனம் செலுத்த வேண்டியது அவசியமானதாகும். ஏனெனில் மிகுந்த எதிர்பார்ப்புக்களுடன் கல்வியைத் தொடங்க இருக்கும் உங்கள் பிள்ளைகளின் இலக்குகளை அடையக்கூடியதாக இருக்கவேண்டும்.

நிறுவனத்தை நீங்கள் தெரிவு செய்கின்ற போது நிறுவனத்தில் நிலைத்திருக்கும் தன்மை, கடந்தகால செயற்பாடுகள் நிறுவனத்தின் வளங்கள் (கணினிகள் மற்றும் தொழிநுட்ப வசதி, விரிவுரையாளர்கள் மற்றும் அடிப்படை வசதிகள்) என்பவற்றுடன் மிக முக்கியமாக நிறுவனத்தின் கல்வித்தரத்தினையும் நிறுவனத்திற்கு இருக்கும் அங்கீகாரத்தினையும் அறிந்து கொள்ளுதல் மிகமுக்கியமானதாகும்.

நீங்கள் கற்க வேண்டிய கற்கை நெறிகளைத் தெரிவு செய்யும் போது உங்கள் தெரிவு சுயமானதாகவும் உங்கள் எதிர்கால இலக்கிற்கு ஏற்பதாகவும் இருப்பது சிறந்தது. உதாரணமாகப் பொறியியல் பீடங்களிற்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் கணினி வரைபுகளுடன் தொடர்புபட்ட **Auto CAD** மற்றும் கணினி மென் பொருள் உருவாக்கத்துடன் தொடர்புடைய (**Computer Programming**) கற்கை நெறிகளைத் தெரிவு செய்வது சாலச்சிறந்ததாகும்.

குறிப்பாக இந்த வருடம் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாண வர்கள் தமது பெறுபேறுகள் வரையுள்ள காலத்தை வணாக்காது தமக்குப் பொருத்தமான பயிற்சி நெறிகளைத் தெரிவுசெய்து இணைந்து கொள்வது பொருத்தமானதாகும்.




# நவீன தொழில் நுட்ப அறிமுகங்களுடன் IBMS

கடந்த 5 வருடங்களாக தகவல் தொழில்நுட்ப கல்வியினை வழங்குவதில் யாழ். மாவட்டத்தில் முன்னணி வகித்துவரும் நிறுவனங்களில் ஒன்றான IBMS நிறுவனமானது ஏனைய நிறுவனங்களுடன் ஒப்பிடும் பொழுது இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் அங்கீகரிக்கப்பட்ட ஓர் தனித்துவம் மிக்க நிறுவனமாகும். 2002ம் ஆண்டில் 3ம் நிலைக் கல்வி தொழில்சார் ஆணைக்குழுவினால் கிடைத்த அங்கீகாரத்தினூடாக ஒரு முழுமையான அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமாக IBMS இலங்கையின் வடக்குக் கிழக்கில் திகழ்கின்றது. அது மட்டுமல்லாது இலங்கையின் கணனி பயிற்றுவிப்பு மையங்களின் கூட்டமைப்பிலும் அங்கத்துவ நிறுவனம் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இந்நிறுவனம் கடந்த 5 வருடங்களில் அரச தனியார் துறை சார்ந்த நிறுவனங்கள், வட பகுதி மாணவர்கள் என பல்வேறு தரப்பினருக்கு பல்வேறு மட்டங்களில் பயிற்சி நெறியினை வழங்கிவந்துள்ளது. இந்நிறுவனத்தின் மாணவர்கள் பல்வேறு இடங்களில் தமது திறமையினை நிருபித்து வருகின்றனர். இது எமது திறமையான செயற்பாட்டிற்குக் கிடைத்த ஒரு மிகப்பெரும் வெற்றியாகும்.


எமது நிறுவனம், கணனிக் கல்வியானது அனைத்துத் தரப்பு மாணவர்களுக்கும் சென்றடையக் கூடிய வகையில் மிகக் குறைந்த கட்டணத்தில் Diploma கற்கைநெறிகளை மேற்கொள்ளவுள்ளது. இச்சந்தர்ப்பத்தை மாணவர்கள் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். முன்னேறிவரும் நவீன தொழில்நுட்ப யுகத்திற்கு ஏற்ற வகையில் எமது குடாநாட்டு மாணவர்களை தயார்படுத்துவதற்கு புதிய நிர்வாகத்தின் கீழ் பல ஆக்க பூர்வமான திட்டங்களை அறிமுகப்படுத்த தீர்மானித்துள்ளது. யாழ். மாவட்ட மாணவர்களின் ஒளிமயமான ஓர் எதிர்காலத்திற்கு ஓர் சிறந்த வழிகாட்டியாக இந்நிறுவனம் திகழும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**New Batches Start on : Batch 1 12/06/2004 Batch 2 14/06/2004 at 10.00 a.m.**


## எந்தப் புலமைப்பரிசில்திட்டமும் வழங்கமுடியாத குறைந்த கட்டணத்தில்




**DIPLOMA IN MICROSOFT OFFICE**
**1,800/=**



**DIPLOMA IN INTERNET TECHNOLOGY**
**3,000/=**



**DIPLOMA IN HARDWARE ENGINEERING**
**3,750/=**



**DIPLOMA IN DESK TOP PUBLISHING**
**2,400/=**

Institute of Business Management Studies

IBMS


# Institute of Business Management Studies

**The Centre for Information Technology**

Head Office
# 410 , K.K.S. Road, Jaffna.
T.P : 021 222 3165

Branches
N.M.M.V. Road, Nelliady.
Sangathannai, Chavakachcheri

Member • Association of Computer Training Organisations • ACTOS



# COMPUTER DIPLOMAS



- Diploma in Language Programming
- Diploma in Hardware
- Diploma in Computer Accounting
- Diploma in Computer Draghting
- Diploma in Desktop Publishing
- Diploma in MS Office

**Diploma in Computer Accounting**

**Batch I : 05/06/2004**
**Batch II : 07/06/2004**
**Batch III: 12/06/2004**

**7 வருடகாலமாக பல்லாயிரம் கணனி விற்பன்னர்களை உருவாக்கிய பெருமையோடு**
**சர்வதேச தாதரமிக்க சான்றிதழ்கள்**
**உள்நாட்டிலேயே வேலைவாய்ப்புக்கான முன்மொழிவுகள்**

Powered by
AOpen P4 Bare System
**Genuine Dealer for Branded Computers**

எமது பட்டதாரிகளடங்கிய சீரிய ஆசிரியர் குழுவினதும் தகவல் தொழினுட்பத்தில் உயரிய நுட்பத்தை உடனுக்குடன் மக்களுக்கு வழங்கிவரும் எம்மால் 2004/2005ம் கல்வியாண்டிற்கான அனுமதிகள் மாணவர்களிடமிருந்து தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இப்பாடநெறிகள் எமது சாவகச்சேரிக் கிளையிலும் ஆரம்பமாகின்றன.



**தகுதிபெற்ற பட்டதாரி விரிவுரையாளர்களின் விரிவுரையில் தகுதியான எதிர்காலம் நோக்கி**

T.V.E.C.

STP Your Partner in IT solution
73, Palaly Road, Kantharmadam, T.P:021-222-2674
Branch: Chavakachcheri

# மாணவர்களே உங்களின் உறுதியும் இறுதியுமான தெரிவுக்கு

# eTouch COMPUTER SYSTEM


" The right way to touch IT "

UDUVIL ROAD, MARUTHANARMADAM, JAFFNA

T.P :0214-590222 E-MAIL : etouch@wow.lk

ஏனென்றால் உங்களுக்குத் தேவை. . . .

மொழிப்பிரச்சினையற்ற பூரண வழிகாட்டல்...
சர்வதேச அங்கீகாரம்........
மிகக் குறைவான கட்டணம்.......
நீண்ட நேர செய்முறைப்பயிற்சி.....
அமைதியான சூழல்......
கணனித்துறையில் அனுபவம் வாய்ந்த கற்பித்தல்..
குறைந்த காலப்பகுதியில் நிறைவுசெய்தல்....




அனைத்து மாணவர்களுக்கும்.
FREE HANDOUTS !
FLOPPY DISKETTE !!
SOFTWARE CD !!! &
FREE COMPUTER CONSULTING!!!!

**இவையனைத்தையும் ஒன்றாகப்பெற்றிட நாங்கள் உதவுகின்றோம்**

கணனித் துறையில் காலடி வைக்கும்
புதிய மாணவர்களுக்கான அதிரடிச் சலுகையாக...



## MS OFFICE XP
## PC HANDLING

**ஆகிய இரண்டு DIPLOMA பாட நெறிகளுக்கும் ஒரே கட்டணமாக**

ரூபா **2100/=**
மட்டுமே



உங்களுக்காகவே எளிய முறையில் வடிவமைக்கப்பட்ட எமது பாடநெறிகள்.

- DIPLOMA IN MULTI MEDIA (**with Video mixing**)
- DIPLOMA IN DESKTOP PUBLISHING
- DIPLOMA IN HARDWARE(**Online** )
- DIPLOMA IN COMPUTER PROGRAMMING
- DIPLOMA IN INTERNET TECHNOLOGY
- DIPLOMA IN AUTOCAD(**WITH NEW SOUTH WALES UNIVERSITY SYLLABUS AND GUIDE BOOKS**)

**காலம் : 3** *months*

சகல மாணவர்களுக்கும் Diploma in PC Handling **இலவசமாகும்**

**CLASS TIMES**
காலை .- **7.00, 9.00, 11.00**
மாலை - **3.00, 4.00, 6.00**
இரவு - **6.00, 7.00-9.30**

### புதிய பிரிவுகள் யாவும் எதிர்வரும்
### **06-06-04** அன்று ஆரம்பமாகின்றன.

மேலதிக தகவல்களுக்கும், விசாரணைகளுக்கும் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### எம்மைப்பற்றியும் சில வார்த்தைகள்..

யாழ் குடாநாட்டிலே கடந்த FEBRUARY மாதம் சேவையை ஆரம்பித்த எமது நிறுவனம், இவ் 4 மாத காலப்பகுதியில் பல புதிய கற்கை நெறிகளையும் சேவைகளையும் புரிந்துள்ளது.

இதில் முக்கியமாக **Diploma in Multimedia, Diploma in Author ware** போன்ற கற்கை நெறிகளையும், இரவு நேர வகுப்புக்களையும் இலவச ஆலோசனைச் சேவைக்ளையும் குறிப்பிடலாம்

வடமராட்சி, தென்மராட்சி மாணவர்களும் நேரடியாக அடையும் போக்குவரத்துப்பாதை, சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ், குறுகிய கால(2,3 வாரங்கள்) கற்கைநெறித் திட்டங்கள் *[ AUTO CAD, HARDWARE, PHOTO EDITING ]* ஆகியன உங்களுக்க வேண்டிய தெரிவுகளாகும் என்பதில் ஐயம் இல்லை!!!

## " The Right Way To Touch IT "

ETOUCH COMPUTER SYSTEM, UDUVIL ROAD, MARUTHANARMADAM, JAFFNA. TP. NO. 021-4590222

# GLOBAL VILLAGE COMPUTER EDUCATION

*(A unit of Sovereign Infotech India Pvt. Ltd.)*

நாடளாவிய இலவச MULTIMEDIA கணினி கருத்தரங்கு

## ISLANDWIDE Multimedia SEMINAR 2004

நாளைய கணினி உலகின் தகவல் தொழிநுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் MULTIMEDIA துறை பற்றி அறிந்துகொள்வதற்கான அரிய சந்தர்ப்பம் !!!!

இந்திய தலைமையகத்துடன் இணைந்ததும் இலங்கையில் முன்னணி கணினி கல்வியகமுமான எமது நிறுவனம் நாடெங்கிலும் *MULTIMEDIA* தொடர்பான இலவச கணினி கருத்தரங்கை நடாத்தவுள்ளது. இக்கருத்தரங்கானது பாடசாலைக்கல்வியின் பின் தகவல் தொழிநுட்பத்துறையில் தமது எதிர்காலத்தை முன்னேற்றிக்கொள்ள விரும்பும் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பமாக அமையும். இக்கருத்தரங்கில் பங்குபற்றுவோர் *MULTIMEDIA* தொடர்பான அறிவையும் கற்கைநெறி விளக்கங்களையும் பெற்றுக்கொள்வதுடன் *MULTIMEDIA* கணினி கற்கைநெறிகளைக் கற்பதன் மூலம் எதிர்காலத்தில் அவர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய வேலைவாய்ப்புகள் பற்றியும் அறிந்துகொள்ளலாம்.

### கருத்தரங்கு நடைபெறும் இடங்களும், நேரமும்

| | | |
|---|---|---|
| 28/05/2004 - மட்டக்களப்பு | - DEVANAYAGAM HALL | காலை 9.30 மணிக்கு |
| 29/05/2004 - திருகோணமலை | - HINDU CULTURAL HALL | காலை 9.30 மணிக்கு |
| 30/05/2004 - வவுனியா | - RAMBAIKKULAM GIRLS MAHA VIDYALAYAM | காலை 9.30 மணிக்கு |
| 30/05/2004 - மன்னார் | - TOWN HALL MANNAR | மாலை 4.00 மணிக்கு |
| 02/06/2004 - யாழ்ப்பாணம் | - JAFFNA CENTRAL COLLEGE | காலை 9.30 மணிக்கு |

தொடர்புகட்கு :

**CORPORATE HEAD OFFICE**

GLOBAL VILLAGE COMPUTER EDUCATION
116, SEA STREET, NEGOMBO
031-2235955, 2238645

**REGIONAL OFFICE**

19/2, FARM ROAD,
COLOMBO-15
011-4615202

**FRANCHISEES**

365, TRINCO RD,
BATTICALOA.
065-2225899

197 C2, COURT RD,
TRINCOMALEE.
026-2223668

119, POINT PEDRO RD,
NALLUR, JAFFNA.
077-7279034

37, VAIRAVARKOVIL RD,
VAIRAVAPULIYANKULAM,
VAVUNIYA.
024-2220143

6 ½, HEKITTA RD,
WATTALA.
0112-945770

SINNAKADAI,
MANNAR.

# PATRICIAN INSTITUTES

## பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

கீழ்காணும் பயிற்சி நெறிகள் எமது நிறுவனத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாணவ, மாணவியருக்கு அறியத்தருகின்றோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| I. | COMPUTER COURSES. (DIPLOMA & CERTIFICATE COURSES) | | VI | வானொலி, தொலைக்காட்சிப்பெட்டி திருத்துதல் | காலம் 8 மாதங்கள் |
| II | சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (ஆங்கிலம்) | காலம் 6 மாதங்கள் | VII | கடைச்சல் இயந்திரத் தொழிற்பயிற்சி | காலம் 3 மாதங்கள் |
| III | சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (தமிழ்) | காலம் 6 மாதங்கள் | VIII | மின் ஒட்டுநர் பயிற்சி | காலம் 3 மாதங்கள் |
| IV | மோட்டார் வாகனம் திருத்துதல் (Petrol or Diesel வாகனங்கள்) | காலம் 6 மாதங்கள் | IX | மரவேலை (With use Machinery) | காலம் 6 மாதங்கள் |
| V | ஜெனரல் எலக்ரீஷன் (மின்சார இணைப்பு, மோட்டார் றிவைண்டிங்) | காலம் 6 மாதங்கள் | X | குளிர்சாதனப்பெட்டி திருத்துதல் | காலம் 6 மாதங்கள் |

எமது நிறுவனத்தில் கணனிகள் சம்பந்தமான சகல திருத்த வேலைகளும், வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளில் ஏற்படும் எல்லாவித பழுதுகளும் திருத்தம்செய்து கொடுக்கப்படும்.

Note:
1. பயிற்சிக் கட்டணங்களை தவணைமுறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் போதிய ஆதாரம் காட்டி, பங்குக் குருவானவரின் (Parish Priest) சிபார்சின் பெயரில் பயிற்சிக்கட்டணத்தில் சலுகையைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. எமது நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படும்.
4. பயிற்சி நெறிகள் சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

PRODUCTION AND REPAIRING ON ORDER... கட்டமைத்தலும், திருத்துதலும்.
சகல விதமான இரும்புசார் உற்பத்திப்பொருட்களும், ஒட்டு வேலைகளும், மரத்தளபாடங்களும் உறுதியான செ[illegible]ல்சார் அறிவுமூலமும் ஒடருக்கு மிக விரைவாகவும், திறமையாகவும் செய்து கொடுக்கப்படும்.

வாகனத் தகுதிச்சான்றிதழ் - 2004 FITNESS CERTIFICATE FOR MOTOR VECHICLE
2004 ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச்சான்றிதழ் எமது நிறுவனத்தினால் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதனை சகல வாகன உரிமையாளருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன், மோட்டார் சைக்கிளுக்கான Engine No. பொறித்துக்கொடுக்கப்படும். வாகன ம[illegible]ப்பிட்டு பெறுமதி செய்து கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:T.P. 222 6148 (சி/2471)

REGISTRAR,
PATRICIAN INSTITUTE, 59, ST.PATRICK'S ROAD, JAFFNA.

# JAFFNA TECHNICAL INSTITUTE.

## JAFFNA, SRI LANKA.

25 ANNIVERSARY

e-mail : jti@sltnet.lk Reg. No 15251 T.P : 0777-292127

## Diploma Courses

**Diploma in Microsoft Office XP**
- Introduction to Computer
- Word XP
- Excel XP
- Access XP
- PowerPoint XP
- Introduction to Internet, E-mail

Duration 5 Months

**Diploma in Desktop Publishing**
- Introduction to Computer
- Word XP
- Corel Draw 11
- Page Maker 7
- Photoshop 8

Duration 4 Months

**Diploma in Windows Application**
- Introduction to Computer
- Windows XP
- MS DOS
- Visual Basic
- HTML
- Introduction to Internet, E-mail

Duration 6 Months

**Diploma in Hardware Engineering**
- Hardware Concepts
- Assemble a Complete PC System
- Software Installations & Configurations
- Handling Diagnostic Tools
- Networking, Fax modem Connection
- Multimedia, internet
- Computer Virus, Troubleshooting

Duration 4 Months

**Diploma in Computer Programming**
- Introduction to Computer
- Visual Basic 6
- HTML
- C/C++
- Java
- Visual FoxPro 6
- Internet, E-mail

Duration 8 Months

**Diploma in Visual Basic Programming**

Duration 4 Months

**Certificate Courses**

Word XP
Excel XP
Access XP
PowerPoint XP
Corel Draw 11
Page Maker 7
Visual FoxPro 6
HTML
Java
Oracle
Pascal
C/C++

கடந்த 25 வருடங்களாக கணனித்துறையிலும் தொழில்நுட்பத்துறையிலும் பெரும் பங்காற்றி வரும் எமது நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு இலவச கணனிப் பயிற்சியினை வழங்கி வருகிறது அதேபோல் இவ்வாண்டும் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது.

இவ் விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து அல்லது சுயமாக தயாரித்து கீழ் காணும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பவும்

**No: 07, Palaly Road,
Jaffna, Sri Lanka.**

புதிய பிரிவுகள் ஆரம்பம் 11.06.04 / 12.06.04 10.00 மணி

**APPLICATION FORM**

Full Name : ...............................
Address : ...............................
Date of Birth : ...............................
Course : ...............................

........... Date ........... Signature of Applicant